Registered as a News Paper in Sri Lanka

சமூக அரசியல் மாத இதழ்

# கண்ணோட்டம்

KANNODDAM

කණ්ණොඩ්ඩම්

வெளியீடு - 67 | 01 அக்டோபர் 2014 | விலை ரூபா :- 10.00

# தெலுங்கானா – ஸ்கொட்லாந்து – கிரிமியா

# அனுபவங்கள் தரும் பாடங்கள்

மக்களுக்கு -மாநிலங்களுக்கு- பிராந்தியங்களுக்கு அதிகாரமளிப்பதில் உணர்ச்சி வசப்படுதல்கள் இல்லை.

இன்று மாநில அளவில் -பிராந்திய அள வில்- அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது உலகப் பொதுப் போக்காக வளர்ச்சி அடைந்து வருகிறது. இது குறுகிய பிரிவினை அர்த்தம் கொண்டதல்ல.

ஆந்திராவில் பரந்த தெலுங்கானா பிர தேசம் பல வழிகளில் பின்தங்கியதாக இருந்தது.தனிமாநிலம் உருவாக்கப்பட வேண்டும் என்று பல்வேறு காலகட்டங் களில் போராட்டங்கள் கோரிக்கைகள் எழுந்தன. தற்போது அது தனிமாநிலம் ஆகியிருக்கிறது.




இந்தியா என்ற மாபெரும் தேசத்தின் வண் ணங்களின் கலவையான ஒரு பகுதி அது.

ஸ்கொட்லாந்து 1999 இல் பாராளுமன்றம் உருவானது.

தற்போது ஐக்கிய ராச்சியத்தின் ஒரு பகு தியா அல்லது பிரிந்து செல்வதா என்ற சர்வசன வாக்கெடுப்பு நடைபெற்றது. 55 வீதமானோர் ஐக்கிய ராச்சியத்தில் இணை ந்திருப்பதற்கே வாக்களித்தனார். மிகுதி 45 வீதமானோர் பிரிந்து செல்வதற்காதர வாக வாக்களித்தனர்.

ஸ்கொட்லாந்திற்கு மேலும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் என பிரதான பிரித் தானிய கட்சிகளால் வாக்குறுதி அளிக்கப் பட்டுள்ளது.

கனாடாவின் மாநிலமான கியூபெக்கில் 1995 இல் இத்தகைய ஒரு வாக்கெடுப்பு

(தொடர்ச்சி 7 ம் பக்கம்)

## நாசமானது குடிநீர்

சுன்னாகத்தில் மின்சார நிலையத்தை சூழ வுள்ள கிணறுகளில் எண்ணெய் கசிவுக ளால் கிணற்று நீர் பாவனைக்கு உதவாத தாக மாறியுள்ளது.

சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவு ஓயில் மற்றும் கிறிஸ் போன்றவையே தமது கிணறுகளில் நீர் மாசடைந்ததற்குக் காரணம் என பாதிக்கப் பட்ட அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திற்கு அருகாமையில் உள்ள கிணற்றிலிருந்து சங்குவேலி, கந்தரோடை பகுதிகளுக்கு மேற்கொள்ளப்பட்டு வந்த குடிநீர் விநியோ கத்தை கிணற்று நீரில் எண்ணெய் கலந் திருப்பதாக தெரிவித்து 2012 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் நீர் வழங்கல் அதிகார சபை நிறுத்திக் கொண்டது.

இதேவேளை சுன்னாகம் பிரதேச மக்கள் கழிவு எண்ணெய் கலந்த தமது கிணற்று நீரையே குடிநீராகப் பயன்படுத்தி வந்தனர்.

இந்த நீரை பயன்படுத்த வேண்டாம் என்ற போதிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படாத துடன் அவர்கள் குடிநீரை பெறுவதற்கான மாற்று ஏற்பாடுகளும் இருக்கவில்லை.

இப்பிரதேச மக்களின் முறையீட்டைத் தொடர்ந்து வலிகாமம் தெற்கு பிரதேச சபை தலைவர் த.பிரகாஷ் தலைமையில் 29.08.2012 இல் நீர் மாசடைந்ததற்கான காரணத்தை தெளிவாக இனங்காண்பதற் கும், அதற்கான தீர்வை எட்டுவதற்கும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அதி காரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை, இலங்கை முத லீட்டுச் சபை, வலிதெற்கு பிரதேச சபை ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் பாதிப்பை எதிர்கொண்டிருந்த பொதுமக்களும் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்

இக் கலந்துரையாடலின்போது மின் பிறப் பாக்கி நிலையத்தைச் சூழவுள்ள பிரதேசத் தில் வசிக்கும் பொதுமக்களின் கிணறுக ளில் அதிகளவு எண்ணெய் தன்மை காண ப்படுவது பரிசோதனைகள் மூலம் தெரிய வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதுடன் மின் பிறப்பாக்கி நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவு ஓயில் மற்றும் கிறிஸ் போன்றவை நிலத்தில் முறையற்ற விதத் தில் வெளியேற்றுவது காரணமாக இருக்க லாம் என பலராலும் கருத்துத் தெரிவிக் கப்பட்டதுடன் மின் பிறப்பாக்கி நிலையத் தில் கழிவகற்றும் முறையை நேரில் சென்று பார்வையிட வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மின்பிறப்பாக்கி நிலையத்திற்கு நேரில் விஜயம் செய்த மேற்படி குழுவினர் அங்கு வெளியேறும் கழிவு நீர், ஓயில் ஆகியன உரிய முறைப்படி அகற்றப்படாது தரை யில் பாத்திகளில் தேங்கியிருந்ததை அவ தானித்தனர். இவ்விடயம் தொடர்பில் மத் திய சுற்றாடல் அதிகாரசபை உரிய நடவ டிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என

(தொடர்ச்சி 8 ம் பக்கம்)

பத்மநாபா ஈபிஆர்எல்எவ் கட்சியின்

கருத்துக்கள் செய்திகளை

இணையத்தில் பார்வையிட

http://www.eprlfnet.com

LIKE US ON facebook

முக நூலில் விரும்ப

Eprlf Pathmanaba

FOLLOW US ON twitter

டுவீற்றரில் தொடர

https://twitter.com/EPRLF

## புத்துயிர் பெறும் கைத்தொழிற் பேட்டை

கடந்த கால யுத்தத்தின் விளைவாக இரு ந்த இடமே தெரியாமல் அழிந்துபோன அச்சுவேலி கைத்தொழிற் பேட்டைக்கு மீண்டும் உயிரூட்டுவதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த கைத்தொழிற் பேட்டைக்காக 65 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் 25 ஏக்கரில் முதற்கட்டமாக வீதிகள், மின்சாரம், குடிநீர், கழிவகற்றல் போன்ற உட்கட்டுமான வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இதற்கொன 27.5 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதில் 22.5 கோடி ரூபாவை இந்திய அரசாங்கமும், 5 கோடி ரூபாவை இலங்கை அரசாங்கமும் வழங்கியுள்ளன.

இங்கு முதலீட்டாளர்கள் தொழிற்சாலை களை நிர்மாணிப்பதற்கு 40, 80, 160 பேர்ச்கள் அளவான காணித்துண்டுகள் குறைந்த குத்தகைக்கு 30 வருடங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

ஆரம்பத்தில் 8 நிறுவனங்கள் தமது உற்பத்தி நடவடிக்கைகளை கைத்தொழிற் பேட்டையில் ஆரம்பிப்பதற்கான இட ஒதுக் கீட்டினை பெற்றுள்ளன.

ஷேமா இன்டஸ்ரீஸ் பழ ரசங்கள், சோஸ் வகைகள், ஜாம், ஊறுகாய் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்காக 140 மில்லியன் களை முதலிடவுள்ளனர்.

இதே வகையான உற்பத்திகளுக்காக வெஸ்ரா இன்டஸ்ரீஸ் இதேயளவான தொகையை முதலிடவுள்ளது.

சாரா இன்டஸ்ரீஸ் 200 மில்லியன் செல வில் கட்டிட நிர்மாணப்பணிகளில் பயன் படும் இரும்பு, மற்றும் பித்தளையினாலான பொருட்களை உற்பத்தி செய்யவுள்ளது.

யூனியன் என்ரப்பிரைஸ் 168 மில்லியன் செலவில் கூரைத் தகடுகள், பி.வி.சி மற்றும் தோட்டப் பாவனைக்கான குழாய்கள் என்ப வற்றை உற்பத்தி செய்யவுள்ளது.

நோபிள் பிறின்ரேஸ் மீள் சுழற்சி முறை யில் காகித உற்பத்தியை மேற்கொள்ள வுள்ளது. இதற்கென 155 மில்லியன்களை முதலிடத் திட்டமிட்டுள்ளது.

(தொடர்ச்சி 7 ம் பக்கம்)

பாலா தம்புவின் சுயாதீனம் பக்கம்- 02



தமிழர் ஒற்றுமை விடுதலை பக்கம்- 03



இலண்டனில் இருந்து அன்புமடல் பக்கம்- 04




ஜெயலலிதா கைதும் கண்ணீரும் பக்கம்- 05



தோழர்களை நினைவு கூருவோம் பக்கம்- 07



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம்
KANNODDAM
294, கண்டிவீதி, புங்கன்குளம் சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222022



## ஜனநாயக இடைவெளியை உருவாக்குவற்கான பாதையில்...

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் சிறுபான்மைச் சமூகங்கள் குறிப்பாக தமிழர்கள் தொடர்பிலும் நாடளாவிய அளவிலும் எத்தனை அனர்த்தங்களை விளைவித்ததோ அதேயளவு தாக்கங்களை சகல அதிகாரமும் கொண்ட ஜனாதிபதி முறை ஏற்படுத்தியிருக்கிறது.

1978 அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்த அதேகாலப்பகுதியில் தான் பயங்கரவாத தடைச்சட்டமும் கொண்டுவரப்பட்டது.

உண்மையில் இந்த இரண்டுமே இலங்கையின் அரசியல் யாப்பு மற்றும் சட்டங்களிலிருந்து நீக்கப்படவேண்டும்.

ஜனநாயக நிறுவனங்கள் சிதைவடைவதில் இது பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதிகாரபோதை தலைக்கேறுவதற்கு வழி வகுத்ததெனலாம்.

1978 இற்குப்பின்னர் இலங்கையின் சமகால இருண்ட வரலாறு ஆரம்பமானது. அது 3 தசாப்தங்களைக் கடந்தது.

இன ஒடுக்குமுறை, தொழிலாளர் விரோத நடவடிக்கைகள், மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் அதிதீவிர பாசிச பயங்கரவாத சக்திகளின் எழுச்சி, கலவரங்கள், காணாமல் போதல் சித்திரவதைகள் என்பன பாரிய அளவில் இலங்கையில் அறிமுகமாயின.

வரம்பற்ற அதிகாரம் சமூக துஸ்பிரயோகங்களுக்கும்- சர்வாதிகாரத்திற்கும் வழிவகுக்கிறது. இன்று நாடு இராணுமயப்பட்டிருப்பதற்கு - அராஜகங்கள் தலைதூக்கியிருப்பதற்கு இந்த வரம்பற்ற அதிகரம் தான் காரணம்.

இந்த சகல அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறையையும் பயங்கரவாத தடைச்சட்டத்தையும் இந்த நாடு சுமப்பதை ஜனநாயக உணர்வு கொண்டவர்கள் இந்த நாட்டின் சிறந்த எதிர்காலத்தை அவாவுறுவோர் சகியார்.

இவற்றை வைத்துக் கொண்டு நாடு உருப்படவும் முடியாது.

தமது அன்றாட வாழ்வு சுதந்திரமானதாகவும், தமது சந்ததியின் எதிர்காலம் பாதுகாப்பானதாகவும் இருப்பதையே இந்த நாட்டுமக்கள் விரும்புகிறார்கள். குறிப்பாக தமிழ் மற்றும் சிறுபான்மைச் சமூகங்களும் நாடளாவிய அளவில் அனைத்து மக்களும் உணரும் விதமாக ஆக்கபூர்வமாக மாற்றங்கள் நிகழவேண்டும்.

தமது அன்றாட வாழ்வின் மீது தலையீடு, மன்னராட்சி மனோபாவங்கள் மக்கள் மத்தியில் எரிச்சலையும் ,விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் பெருவாரியான மக்கள் மீது செலுத்தும் அதிகாரம் வெகுஜனங்களை வெறுப்படைய வைக்கிறது.

நாடு ,இறையாண்மை யாருடையது என்ற கேள்வி எழுகிறது.

எனவே, விசேட அதிகாரம் கொண்ட மையத்தை கெட்டிப்படுத்துவதற்குப் பதிலாக அதிகாரங்கள் பாராளுமன்றம் மாகாண சபைகளினூடாக பிரயோகிக்கப்படுவதற்கான நிலைமைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பாராளுமன்றம் மாகாணசபை என்பன நிறைவான அர்த்தமுள்ள அதிகாரம் கொண்டவையாக அமைய வேண்டும்.

இலங்கையில் இரண்டு சட்டவாக்க சபைகள் இருப்பதை உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டிதை அடுத்து முன்னாள் பிரதம நீதியரசர் பதவி இழக்கும் நிலை உருவானது.

நீதிமன்றம், பாராளுமன்றம், மகாண சபைகளின் சுயாதீனமும் ஒருங்கிணைவும் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஆனால் இங்கு விசேட அதிகாரம் எல்லாவற்றையும் அலட்சியம் செய்கிறது.

எமது நாட்டின் அனுபவத்தின அடிப்படையில் விசேட அதிகாரங் கொண்ட ஜனாதிபதி முறை நீங்கிய பாராளுமன்றம் மற்றும் மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை பாராதீனப்படுத்திய கட்டமைப்பு உருவாக வேண்டும்.

சுயாதீனமான தேர்தல் ஆணையகம் ,நீதிதத்துறை ,சட்டம்-ஒழுங்கு மற்றும் பொதுச்சேவைத்துறை கட்டுமானங்கள் உருவாக்கப்படவேண்டும்.

ஆனாலும் மக்களால் நேரடியாகதெரிவு செய்யப்பட்ட சட்டவாக்க சபைகள் பிரத்தியேக அதிகாரம் உடையவை என்பதும் கருத்திற்கெடுக்கப்படவேண்டும்.

மேலிருந்து கீழ் ஜனநாயகம் நிலவவேண்டும்.

மனித உரிமை ஜனநாயகம் மக்களின் உரிமைகள் பற்றிய புரிதல் சகல பிரிவுகள்- மட்டங்களிலும் உணர்த்தப்படவேண்டும். அதற்கான பயிற்சிநெறிகள் உருவாக்கப்படவேண்டும்

இது மிக மிக முக்கியமான விடயம்.

தனிமனிதரதும் -தொழிலாளர்கள் -சமூகக்குழுக்கள்-சமூகப்பிரிவினரதும்- பெண்களதும் சிறுவர்களதும் சுதந்திரம் உரிமைகள் பற்றிய அறிவூட்டல் முக்கியமானது.

மக்களின் சுதந்திர உணர்வில் தான் ஒரு தேசம் மிளிர்கிறது. கலாச்சார செழுமை கொண்ட நாடுகளாக அவற்றைத்தான் குறிப்பிடமுடியும்.

# சுயாதீனமான தொழிற்சங்கவாதி

## யாழ்ப்பாணத்தில் பாலா தம்பு நினைவு தின வைபவத்தில் புகழஞ்சலி

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் (சி.எம்.யு) முன்னாள் பொதுச் செயலாளர் பாலாதம்பு அவர்களை நினைவு கூரும் நிகழ்வு யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை மண்டபத்தில் கடந்த 28.09.2014 அன்று நடைபெற்றது.

அருட்தந்தை ஜெயசீலன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சீமெந்து ஊழியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் எஸ்.கணபதிப்பிள்ளை, பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன சி.எம்.யு வின் முன்னாள் தலைவர் ஜெகநாதன் வங்கி ஊழியர் சங்க முன்னாள் அமைப்பாளர் தா. குகநேசன், சமூக ஆர்வலர் சொ. சிவபாலன், வட பிராந்திய சி.எம்.யு முக்கியஸ்தர் எஸ்.சுந்தரலிங்கம், சமூக செயற்பாட்டாளர் எம். சூரியசேகரம் ஆகியோர் உரைகளை ஆற்றினர்.

பாலா தம்பு அவர்கள் ஒரு கட்சி சாராத சுயாதீனமான தொழிற் சங்கவாதி, எனப் பலரும் கருத்துத் தெரிவித்தனர். அவர் தனது நிலைப்பாட்டில் இறுதிவரை உறுதியோடு வாழ்ந்து காட்டிய ஒருவர் எனவும் சுட்டிக்காட்டினர்.


கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்றவர், ஆங்கிலத்தில் புலமை மிக்கவர், பேச்சாற்றல் உள்ளவர். சிறந்த தொழிற்சங்கவாதி, வழக்கறிஞர், புரட்சிகர மாக்ஸியவாதி, மனித உரிமைவாதி மனித நேயம் மிக்கவர் என அவரது பன்முக ஆளுமைகளை விதந்துரைத்தனர்.

முன்னாள் சி.எம்.யு தலைவர் ஜெகநாதன் தனது உரையில் பாலா தம்பு தொழிற்சங்க இயக்கத்தில் ஒரு துறைசார் வல்லுனர். கம்பனி நிர்வாகிகள், அரச அதிகாரிகளின் ஆதிக்கத்தை ஆட்டம் காணவைத்தவர். விரிவுரையாளராக தொழில் புரிந்த அவர் 1947 இல் அரசாங்க ஊழியர்களின் பொது வேலைநிறுத்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஒரு கூட்டத்தில் பேசியதற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டார். 66 வருடங்கள்வரை தான் கூறியவற்றை பின்பற்றி வாழ்ந்தவர். தொழிற்சாலைகளுக்கு சைக்கிளில் சென்று தொழிலாளர்களை அமைப்பாக்குவதற்கு உழைத்தவர். தொழிலாளர்களின் நலனுக்காக தனது வாழ்வை அர்ப்பணித்தவர் என்று கூறினார்.

1957 இல் 55 கம்பனிகளை உள்ளடங்கிய முதலாளிகள் சம்மேளனம் 15 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்களை உள்ளடக்கிய வர்த்தக ஊழியர் சங்கத்துடன் (சி.எம்.யு) கூட்டு ஒப்பந்தத்தை செய்யும் அளவிற்கு பலம் மிக்க தொழிற்சங்கத்தை கட்டியெழுப்பியவர். இக் கூட்டு ஒப்பந்தம் இன்றும் அமுலில் இருப்பதோடு கூட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட பல விடயங்கள் பின்னர் சட்டமாக்கவும்பட்டன.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது கிறிஸ்தவர்கள் பைபிளை பின்பற்றுவதை போலவே தொழிலாளர்கள் பாலா தம்புவின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டுச் செயற்பட்டனர். அதிகாரத்தில் இருந்தவர்களால் போராட்டத்தை தோற்கடிக்க முடியவில்லை.

சிறிமாவோவின் அரசாங்கத்தில் பாலா தம்பு தொழிலாளர் நல அமைச்சராக ஆகும் வாய்ப்பு அவரைத் தேடி வந்தது. தொழிற்சங்கத்தைச் சேர்ந்த பலரும் அவர் அமைச்சராவது தொழிலாளர்களுக்கு மேலும் நன்மை பயக்கும் என்று கருதினர். ஆனால்,



தோழர் பாலா தம்பு நான் இப்போது தொழிலாளர்களான உங்கள் சார்பில் பேசும் ஒருவனாயிருக்கிறேன், அமைச்சராகப் பொறுப்பேற்பின் அரசாங்கத்தின் சார்பில் உங்களோடு பேசும் நிலை உருவாகும் எனத் தெரிவித்து அமைச்சுப் பதவியை நிராகரித்தார். தொழிற்சங்க கவுன்சிலும் பின்னர் அதனை விளங்கிக் கொண்டு அவர் தொடர்ந்தும் வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக தொடர்ந்து பதவி வகிக்க வேண்டும் எனத் தீர்மானித்ததாகவும் தனது உரையில் குறிப்பிட்டார் ஜெகநாதன்.

உலக நாடுகளில் உள்ள தொழிலாளர்களுடன் இணைந்து போராடுவதன் மூலமே இனி தொழிலாளர்கள் போராட்டங்கள் வெற்றி பெற முடியும் என்பதைப் பிற்காலத்தில் பாலா தம்பு குறிப்பிட்டதாக தோழர் குகநேசன் தனது உரையில் குறிப்பிட்டார்.

3 வது தலைமுறை இடதுசாரி இளைஞர்கள் பாலா தம்புவின் அணுகுமுறையைப் விளங்கிக் கொண்டு அவரது கொள்கைகளைப் பின்பற்றி போராடுவார்கள் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்

இந் நிகழ்வில் உரை நிகழ்த்திய சொ.சிவபாலன் ஒவ்வொரு பிரச்சினையிலும் அரசியல் உண்டு எதையும் அரசியலில் இருந்து தவிர்த்துப் பார்க்க முடியாது பாலா தம்பு கட்சி சார்ந்த அரசியலிற்கு அப்பாற்பட்டிருந்தார் என்பதே சரி எனத் தெரிவித்தார்.

பாலா தம்புவை நினைவு கூருகிறோம் என்றால் இன்று தனித்து விடப்பட்டிருக்கும் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு எவ்விதத்தில் தீர்வுகாண்பது?

சுயாதீனமான தொழிற் சங்க அமைப்பை உருவாக்குவதற்கு இன்றுள்ள சூழலில் நாம் என்ன செய்ய வேண்டும் என்ற சிந்தனைகளும் காரணம் என்றார்.

இறுதியாக கருத்துத் தெரிவித்த எம். சூரியசேகரம் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் சி.எம்.யு வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட போது புலிகள் தமிழர்களுக்குத் தனியான தொழிற்சங்கம் வேண்டும். சிங்கள யூனியன் தேவையில்லை என தொழிலாளர்களைப் பிளவு படுத்தும் வகையில் கருத்துக்களைத் தெரிவித்துக்கொண்டிருந்தார்கள்.

பாலா தம்பு புலிகள் தொழிற் சங்கத்திலுள்ளவர்களுடன் பேசுவற்கு சந்தர்ப்பமளித்து "புலிகளும் பேசட்டும் நாங்களும் பேசுவோம்" எனத் தைரியமாகப் புலிகளை எதிர்கொண்டார். இக் கலந்துரையாடல்களின் பின்னர் சிங்கள தொழிலாளர்களுடன் இணைந்திருந்தால் தான் நாங்கள் வெற்றி பெற முடியும் என்பதை தொழிலாளர்களே புலிகளிடம் சொல்ல வைத்த சம்பவத்தை நினைவுகூர்ந்தார்.

ஒரு சமயம் லண்டனில் பால தம்புவை சந்தித்த அன்ரன் பால சிங்கத்திடம் தனி ஈழத்திற்கான போராட்டம் ஏன் தவறானது என்பதை கருத்து ரீதியாக நிராகரிக்க முடியாதவாறு எடுத்துக்கூறினார். அன்ரன் பாலசிங்கத்தால் அவரது கருத்துக்களுக்கு பதிற் கருத்துக்களை முன்வைக்க முடியாத போதும் அவரது போக்கில் மாற்றம் இருக்கவில்லை. தோழர் பாலா தம்பு தெரிவித்த கருத்துக்களின் பிரகாரம் போராட்டம் முள்ளிவாய்க்காலில் முடிந்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் வரவேற்கிறோம்.

அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும் :-

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

294, கண்டி வீதி
புங்கங்குளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
021 2222022


E P I C
P.O. Box 431
Sutton SM1 9LE
UK
email: eprlfp@yahoo.co.uk

159, கடல்முக வீதி,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் ஒற்றுமை மற்றும் விடுதலை

**மத்தியில் உள்ள அரசு மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதில் அப்பட்டமான இழுத்தடிப்பை தயக்கத்தை காட்டுகிறது சட்டரீதியாக உள்ள அதிகாரங்களை நிராகரிக்கிறது. ஒரு அராஜகம் நிலவுவது உண்மையிலும் உண்மை. ஆனால் கிடைத்த வாய்ப்புக்களைக்கொண்டு புத்திபூர்வமாகவும் அர்ப்பண உணர்வுடனும் காரியமாற்ற ஏராளம் விடயங்கள் இருக்கின்றன.**



- சுகு ஸ்ரீதரன் -

தமழர் ஒற்றுமை! அப்படி ஒன்றிருக்கிறதா? கடந்து வந்த 30 வருடங்களில் பகையும் வெறுப்பும் அழிப்பும் தான் சொல்லக் கூடியதாக இருந்தது.

தமிழர்கள் மீதான வெறுப்புணர்வு மாத்திரமல்ல சகோதர சமூகங்களுக்கெதிரான வெறுப்பாகவும் நிலவியது.

எமக்கு நண்பர்களாக இருக்கக் கூடிய அண்டை நாட்டுடனும் வெறுப்பும் விரோதமும் ஏற்படுத்தப்பட்டது.

பேரினவாத அரசுகளின் சிறுபான்மையின விரோத போக்குகள் நிலவிய அளவிற்கு சமூகத்திற்குள்ளேயும் விரோதங்கள் வளர்க்கப்பட்டன.

இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண்பதற்கான பல சந்தர்ப்பங்கள் உருவாயின.

ஆனால், அந்த சந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்டது மாத்திரமல்லாமல் சிறந்த தீர்வை எட்டுவதற்கான சந்தர்ப்பங்கள் அவ்வப்போது கடுமையாக்கப்பட்டு வந்தன.

இன்று மக்களால் தெரிவு செய்யப்பட்ட வட மாகாண சபையின் கீழ் வரக்கூடிய நிர்வாக யந்திரத்தை இயக்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

### ஆக்கபூர்வமான தீர்வுகளுக்கு ஆதரவளிக்கவில்லை.

கடந்த 30 ஆண்டுகளில் தமிழ் அரசியல் அரங்கில் ஆதிக்கம் புரிந்து வந்த அதிகார அகங்காரமும் அதிகாரப்பகிர்வு அல்லது பரவலாக்கல் தொடர்பான அலட்சியமும் முன்னுக்குப்பின் முரணான நிலைமைகளும் தான் இத்தகைய இன்றைய நிலைக்கு பங்களித்திருக்கின்றன என்றால் அது மிகையல்ல.

13 வது திருத்த சட்ட மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட 1988 காலத்தில் நாம் ஒற்றுமையாகச் செயற்பட முன்வரவில்லை.

1995 இல் சந்திரிகா அவர்களின் ஆட்சிக் காலத்தில் சமஸ்டிமுறையிலான தீர்வு பரிந்துரைக்கப்பட்ட போது அதற்கு ஆதரவளிக்க முன்வரவில்லை.

மாறாக அதனை செயற்படுத்துவதில் அக்கறை செலுத்திய் நீலன் திருச்செல்வம் மற்றும் சந்திரிகா மீது தற்கொலை தாக்குதல் நடத்தப்பட்டது.

இதேபோல் இந்திய அமைதி காப்புப் படைக்கெதிரான யுத்தம், பிரேமாதசாவுடனான விடுதலைப்புலிகளின் கூட்டணி மற்றும் த.வி.கூ தலைவர் அமிர்தலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் பத்மநாபா மற்றும் 12 தோழர்கள் படுகொலை, பாரதத்தின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலை எல்லாமே பிரதானமாக அதிகாரப்பகிர்வு-பரவலாக்கலுக்கெதிராகவே அமைந்தன.

### படுகொலைகளை ஆதரித்த தமிழ்த் தலைமை

இன்றைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமையின் பிரதான பிரிவினரால் இந்த அதிகாரப்பகிர்விற்கெதிரான சீர்குலைவு படுகொலைத் தாக்குதல்கள் அனுசரிக்கப்பட்டன அல்லது வெற்றிகரமாக மௌனம் காத்தார்கள்.

ஒரு பாசிச நிலைப்பாட்டினை ஏற்றுக்கொண்டதன் விளைவை இன்றளவில் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றும் நாம் உண்மை பேசத் தயாராயில்லை.

13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசும் தயாராயில்லை.

13 வது எமது கோரிக்கை அல்ல என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தொடர்ந்து கூறிவருகின்றனர்.

புலம் பெயர் அதிதீவிர தேசியவாத சக்திகளுக்கு எப்போதும் தமது கற்பை நிரூபிக்கும் பதட்டம் இவர்களுக்கு இருக்கிறது.

அது இங்கு வாழும் தமிழ் மக்களின் எதார்த்தமான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக அல்ல.

### சமூக அக்கறையுள்ள சக்திகளின் கடமை

எனவே தற்போதைய யதார்த்த நிலைக்கேற்ப அதிகாரப்பரவலாக்கலுக்கான செயற்பாடுகளை சமூக அக்கறையுள்ள சுதந்திரமான சக்திகளே முன்னெடுக்க வேண்டியிருக்கிறது.

மக்களின் ஜீவாதார நலன்களும் அப்படித் தான்.

வறட்சி -குடிநீர்ப் பிரச்சனை அற்ப அரசியல் ஆக்கப்பட்டிருக்கிறது.

தமது வாக்கு சூறையாடல்- களவாணி அரசியலுக்காக மக்களின் உயிருடன் விளையாடும் "கிரிமினல்" பேர்வழிகளான இந்த அரசியல்வாதிகள் அம்பலப்படுத்தப் படவேண்டும்.

உள்ளூராட்சி சபை, மாகாணசபை, பாராளுமன்றம் இவற்றில் எல்லாம் அங்கத்துவம் வகிக்கும் பிரதிநிதிகள் மக்களுக்காக என்ன செய்கிறார்கள் என்பதை பட்டியல் இட முடியுமா?

தமது தனிப்பட்ட சௌகரியங்களுக்கு குந்தகம் வராமல் பார்த்துக் கொள்வது, ஒருவரை ஒருவர் கழுத்தைத் திருகுவது, நடைமுறை சாத்தியமில்லாத பிரேரணைகளை நிறைவேற்றுவது என்று தான் காரியங்கள் நிகழ்கின்றன.

பல நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் இருந்தும் தமது பிரதிநிதிகள் யார் என்று மக்களுக்குத் தெரியாது. அது பற்றிய அக்கறையும் கிடையாது.

இந்த லட்சணத்தில் தான் தேர்தல் முறையும் இன்று வரை நிலவுகிறது. இவர்களின் நடைமுறைகளும் அவ்வாறு தான்.

குடிநீர், வறட்சி, வேகமான இயற்கைச் சுற்றாடல் அழிவு, நோய், தொழிலின்மை, வறுமை பற்றி இவர்களிடம் எவ்வித பிரக்ஞையுமில்லை. எவ்வித திட்டமும் இல்லை.

நெரிசலான கரையோரங்களில் உருவாகியிருக்கும் டெங்கு உள்ளிட்ட நோய்கள் பற்றியோ அல்லது வறட்சியினால் ஏற்படும் பாரதூரமான சிறு நீரக நோய்கள் பற்றியோ அல்லது சமூகத்தில் அன்றாடம் நிகழும் வன்முறைகள் -பாலியல் வன்கொடுமைகள் பற்றியோ இவர்கள் எந்த வித ஆக்கபூர்வமான விழிப்புணர்வு இயக்கங்களையும் நடத்தவில்லை.

- கூட்டுறவு சங்கங்களை பெருவாரியான சாதாரணமக்களுக்கு பயன்தரும் வகையில் மறுசீரமைப்பது
- உள்ளூர் பொது போக்குவரத்தை இலகுவாக மாற்றுவது. எவ்விதமான போக்குவரத்தாயினும் பாதுகாப்பானதாக அமைய வழிசெய்வது.
- மக்கள் தமது அண்டை அயலில் உள்ள வைத்தியசாலைகளில் சிறந்த வைத்தியத்தையும் மருந்தையும் பெற ஏற்பாடு செய்வது.
- ஆரம்பக் கல்வி ஸ்தீரமானதாக அமைவது. மற்றும் இடைநிலையில் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான தகுதியான ஆசிரிய மற்றும் வளங்களை மாணவர்கள் தமது அயலில் உள்ள பாடசாலையில் பெற ஏற்பாடு செய்வது.
- சிறுவர்கள்- இளவயதினரான மாணவர்களுக்கு சத்தான உணவு கிடைக்க வழிசெய்வது.
- பாடசாலையிலும்- சமூகத்திலும் விளையாட்டு -உடல் ஆரோக்கிய செயற்பாடுகளை ஊக்குவிப்பது.
- மலசல கூடம் இல்லாத கிராமங்கள் வீடுகளில் அவற்றை நிர்மாணிப்பதில் உதவுவது.
- நன்னீர் வளத்தைப்பேணுவது -அபிவிருத்தி செய்வது.
- இயற்கை உரம் மற்றும் நிலத்தின் தன்மையை மேம்படுத்துவது.
- கடல் வளங்களை அபிவிருத்தி செய்வது மற்றும் வளப்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது, விவசாயிகள், மீனவர்கள் மற்றும் சிறு தொழில்களில் ஈடுபடுவோரின் சமூகப் பாதுகாப்பு.
- பனை தென்னை மரங்களை மீள் நடுகை செய்வது
- பெண்களின் உரிமைகள், சிறுவர்களின் உரிமைகள், தொழிலாளர் உரிமைகள் பொதுவான மனித உரிமைகள் ஜனநாயகம் பற்றிய விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்துவது. நிர்வாக யந்திரத்தில் இருப்பவர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இது சம்பந்தமான பயிற்சிகள்

இவ்விடயங்கள் ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டும்.

### புதிய தலைமுறை ஒன்று எழுச்சி பெறவேண்டும்.

ஆனால், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட -இன்று சமூகத்தில் கும்பலாக இருந்து கொண்டிருப்பவர்கள்- என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்.

செய்வதற்கு எத்தனையோ வேலைகள் இருக்கின்றன.

மத்தியில் உள்ள அரசு மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதில் அப்பட்டமான இழுத்தடிப்பை தயக்கத்தை காட்டுகிறது. சட்ட ரீதியாக உள்ள அதிகாரங்களை நிராகரிக்கிறது. ஒரு அராஜகம் நிலவுவது உண்மையிலும் உண்மை.

ஆனால், கிடைத்த வாய்ப்புக்களைக் கொண்டு புத்தி பூர்வமாகவும், அர்ப்பண உணர்வுடனும் காரியமாற்ற ஏராளம் விடயங்கள் இருக்கின்றன.

பிரச்சனை என்னவென்றால் இந்த சபைகளில் இருக்கும் பிரதிநிதிகளில் ஏகப் பெரும்பான்மையினர் இறங்கி வேலை செய்யத்தயாராயில்லை.

கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி அமெரிக்கா போகலாமா அல்லது ஜெனிவா போகலாமா அங்கு டொலர்களையோ யூரோக்களையோ தட்சணையாகப் பெறமுடியுமா டொலர் விருந்துகளில் பங்குபற்றலாமா என்பதில் தான் கவனமாக இருக்கிறார்கள். தமது அரசியல் நடவடிக்கைகளை இந்த தனிப்பட்ட அனுகூலங்களுக்கு பங்கம் வராமல் கவனமாக இருத்தல் என்றவாறே செயற்படுகின்றனர்.

இந்த விருந்து வைப்பவர்களும் இந்த விருந்துகளில் பங்குபற்றுபவர்களும் இங்கு அன்றாடம் வறுமையுடனும் துன்பத்துடனும் தனித்துவத்தை அந்தரங்க வாழ்வை இழந்து வசிக்கும் மக்களின் துன்பங்கள் தொடர்பாக பெயரளவிலான அக்கறை கொண்டவர்களே. இந்த மக்களின் அன்றாட நீண்டகாலப் பிரச்சனைகள் இவர்களுக்கு ஆர்வமூட்டுவனவல்ல.

காரியசாத்தியமில்லாத விடயங்கள் தொடர்பில் உணர்ச்சி ஊட்டிக்கொண்டு சௌகரியமான அரசியல் பிழைப்பு நடத்துதல் என்பதே இன்று நிகழ்ந்து கொண்டிருப்பது.

தமது காழ்ப்புணர்வுகளை விட்டு விட்டு தமது தனிப்பட்ட நலன்களை கொஞ்சம் ஒதுக்கிவைத்து விட்டு மக்களுக்காக பணியாற்றத்தயாரில்லை.

ஆயுதமேந்தி போராடிய சாதாரண இளைஞர்கள் அவர்களின் தலைமையின் தவறுகள்- எதேச்சாதிகாரம் -கொலைவெறி-தவறான வழிநடத்தல்- கருவியாகப் பாவித்தல்களுக்கு அப்பால் இவர்களிடம் அர்ப்பணம் இருந்தது. களவாணித்தனம் இருக்கவில்லை.

ஆனால், இன்று மக்கள் பிரதிநிதிகளாக இருக்கும் பலர் மக்களை எவ்வாறு ஏமாற்றுவது என்பதில் குறியாக இருக்கிறார்கள்.

எமது சமூகமும் இவர்களைப் பிரதிநிதிகளாக தாம் தெரிவு செய்தது தொடர்பாக சொரணையற்றிருக்கிறது.

விரல் விட்டு எண்ணக் கூடிய பிரிவினர் சமூக அக்றையுள்ளவர்கள் இருக்கிறார்கள். இதற்கு வெளியே சுயாதீனமாக இந்த மோசடியான பிரதிநிதிகளை- இத்தகையோரின் பிரதிநிதித்துவத்தை நிராகரித்த புதிய தலைமுறை ஒன்று சுதந்திரமாக எழுச்சி பெறவேண்டும்.

மக்களின் எழுச்சிகள், போராட்டங்களிற்குப் பின்னர் அநேக சந்தர்ப்பங்களில் அயோக்கியர்கள் அதிகாரங்களுக்கு வந்திருக்கிறார்கள்.

இதுதான் இங்கும் பிரச்சனை

மத்தியிலிருந்தோ -பிராந்திய மட்டத்திலோ நம்பிக்கையான நிலைமைகள் தோன்றாத வரை இங்கு வாழ்வதற்கான நம்பிக்கைகள் ஏற்படாது.

முன்செல்வதற்கான வாய்ப்புக்களை நாம் மறுதலித்து விட முடியாது.

ஆனால், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் அதற்கான அறிவும், தூரதிருஸ்டியும், செயற்படுதன்மையும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

அதனால் தான் புதிய தலைமுறையின் எழுச்சி வேண்டும் என்கிறேன்.

அது சமூக பொருளாதார அரசியல் உறவுகளை கற்பது - சமூகப் பிரக்ஞையுடன் தொடர்புபட்டது.

இன்று தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையிலான உறவு பாரதூரமாக பாதிக்கப்பட்டுள்ளது.

பொதுவாழ்க்கை இன்று பணம் சம்பாதிப்பதற்கான அதிகாரத்திற்கான மார்க்கம் என்ற வரைவிலக்கணப்பிறழ்வை அடைந்துள்ளது.

ஐக்கியமாகச் செயற்படுவது தமது அதிகாரத்திற்கு, தமது பொருளாதார நலன்களுக்கு பங்கம் என்றவாறே இந்த பிறழ்வுச் சக்திகள் சிந்திக்கின்றன.

ஆற்றல்கள் வளங்கள் வீணாகின்றன. "நல்லதோர் வீணைசெய்து நலங்கெட புழுதியில்" எறிந்தது மாதிரி

**அரசியல் அறம் மீள் எழுகை பெற வேண்டியிருக்கிறது.**

---

13 வது திருத்தச் சட்டமூலம் அறிமுகப்படுத்தப்பட்ட 1988 காலப்பகுதியில் தமிழ் தலைமைகள் அனைத்தும் ஒற்றுமையாகச் செயற்பட முன்வரவில்லை

1995 இல் சந்திரிகா அவர்களின் ஆட்சிக் காலத்தில் சமஷ்டி முறையிலான தீர்வு பரிந்துரைக்கப்பட்டபோது அதற்கு ஆதரவளிக்க முன்வரவில்லை

மாறாக அதனை செயற்படுத்துவதில் அக்கறை செலுத்திய நீலன் திருச்செல்வம் மற்றும் சந்திரிகா மீது தற்கொலை தாக்குதல் நடத்தப்பட்டது.

த.வி.கூ தலைவர் அமிர்தலிங்கம் ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் பத்மநாபா முன்னாள் பாரதப் ராஜீவ் காந்தி ஆகியோரது படுகொலைகள் எல்லாமே பிரதானமாக அதிகாரப்பகிர்வு -பரவலாக்கலுக்கெதிராகவே அமைந்தன.





---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவினையா? அதிகாரப்பரவலாக்கமா?

## அன்பு மடல்- இலண்டனிலிருந்து எழுதுவது வி. சிவலிங்கம்


வி.சிவலிங்கம்

**அன்பார்ந்த வாசகர்களே,**

புலம்பெயர் மண்ணிலிருந்து தாயகத்தை நோக்கி எழுதப்படும் அன்பு மடல் இது. தாயக அரசியலின் போக்கைத் தீர்மானிப்பதில் புலம்பெயர் தலைநகரமான இலண்டன் காத்திரமான பங்கை வகிக்கிறது.

### உயர்ந்த நிலையில் இலங்கைத் தமிழர்கள்

கணிசமான வாக்குப் பலத்தைக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்கள் சில பாராளுமன்றத் தொகுதிகளின் வெற்றியின் போக்கைத் தீர்மானிப்பவர்களாகவும் உள்ளனர். அத்துடன் சில உள்ளூராட்சிகளின் மையப் பகுதிகளின் வர்த்தக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துபவர்களாகவும், அவ் உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாட்டைத் தீர்மானிக்கும் உறுப்பினர்களாகவும் உள்ளனர். இவை மட்டுமல்ல பிரித்தானியாவின் சுகாதாரத்துறையின் நிர்வாகிகளாகவும், பிரதான வைத்திய நிபுணர்களாகவும் அலங்கரிக்கின்றனர். இதற்கு மேலாக தாயகத்தில் எம் மக்கள் கல்வியை எவ்வளவு நேசித்து தமது எதிர்காலச் சந்ததி மேல் முதலீடுகளை மேற்கொண்டார்களோ, அதே அளவு ஈடுபாட்டினை இங்கும் எடுத்து வருகின்றனர். பாடசாலைகளின் கல்வியைப் பொறுத்தமட்டில் குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்குத் தமிழர்களின் கல்வித் தரம் உயர்ந்து காணப்படுகிறது. போரின் காரணமாக தமது சொத்துக்களை விற்றும், கடன்களைப் பெற்றும் பிரித்தானியாவிற்கு வந்தவர்கள் சாமான்ய குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகும். இங்கு காணப்படும் பொருளாதார வாய்ப்புகள் கடுமையான உழைப்பைக் கோரி நிற்கிறது. இப் பின்னணியில் தமது குடும்ப வாழ்க்கைத் தரத்தை உயர்த்த கடுமையான போராட்டம் நடத்துகிறார்கள். இதன் காரணமாக தமது சிறார்களுக்கு மிக உயர்ந்த கல்வியை வழங்க முயற்சிக்கிறார்கள். இதன் விளைவாக சாராசரிக் குடும்பங்களில் பட்டதாரிகளும், டாக்டர்களும், பொறியியலாளர்களும், தொழில்நுட்பவியலாளர்களும், சட்டத்தரணிகளும் நிறைந்து தமிழ்ச் சமூகம் இதர சமூகங்களோடு ஒப்பிடுகையில் உயர்ந்த நிலையில் இருக்கிறது.

இத்தகைய விதத்தில் ஓர் குறிப்பிட்ட காலத்தில் ஓர் சமூகமாக, தமிழர்களாக அடையாளப்படுத்துவதற்குக் காரணம் இலண்டன் மாநகரம் கிட்டத்தட்ட இலங்கையின் சனத் தொகையைக் கொண்டிருக்கிறது. சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யமாக பிரித்தானியா இருந்தமையால், உலகின் பல்வேறு சமூகங்கள் சங்கமிக்கும் ஓர் சிறப்புமிக்க நகரமாக உள்ளது. ஏனைய பிற சமூகங்களோடு இலங்கைத் தமிழரது வருகையை ஒப்பிடும்போது மிகச் சொற்பமான காலமேயாகிலும் குறுகிய காலத்தில் தமது பலமான பிரசன்னத்தினை அடையாளப்படுத்திய இனக் குழுமமாக இலங்கைத் தமிழர் உள்ளனர்.

இம் மக்கள் தமது அரசியல், சமூக, கலாசார அடையாளங்களை எவ்வாறு பகிர்ந்து கொள்கிறார்கள்? தாயகத்து நிகழ்வுகளை எவ்வாறு புரிந்து கொள்கிறார்கள்? உலக நிகழ்வுகளை எவ்வாறு உள்வாங்குகிறார்கள்? தத்தமது பாரம்பரிய கலாசார அடையாளங்களில் எவ்வளவு இறுக்கமாக உள்ளார்கள்? எவற்றில் தமது பிடிகளைத் தளர்த்தி வருகிறார்கள்? இரண்டாம் மூன்றாம் தலைமுறையினர் தாயகத்து நிகழ்வுகளை எவ்வாறு கிரகித்துக் கொள்கிறார்கள்? என பலதரப்பட்ட சந்தேகங்கள் தாயகத்து உறவுகள் மத்தியிலே எழுவது இயல்பானதே. இவற்றை சற்று ஆழமாகவும், விரிவாகவும், விஞ்ஞானபூர்வமாகவும் பகிர்ந்து கொள்வது அவசியமானது. "உண்மையைக் கூறுங்கள். உண்மையாகக் கூறுங்கள்" என்ற பொன்மொழிக்கிணங்க தொடர்ந்து பகிர்ந்து கொள்ளும் முதல் மடல் இதுவாகும்.

ஏற்கெனவே குறிப்பிட்டது போல பல்வேறு சந்தேகங்களும், கேள்விகளும் எழுந்துள்ள தற்போதைய சூழலில் எங்கிருந்து தொடங்குவது என்பது எனக்குப் பெரும் சங்கடமாகவே உள்ளது. இருப்பினும் தாயகத்து அரசியல் நிகழ்வுகள் பல லட்சக்கணக்கான மக்களின் எதிர்காலத்தை தொடர்ந்தும் கேள்விக்குறியாக்கி வரும் இத் தருணத்தில் அவற்றிற்கான தீர்வுகளை நோக்கிய ஓர் அனுபவப் பகிர்வாக அணுகுமுறை அவசியம் என எனது ஆழ் மனது கூறுகிறது.

இக் கடிதத்தை எழுதும்போது மூன்று முக்கிய நிகழ்வுகள் எம்மைக் கடந்து சென்றுள்ளது. பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் முக்கிய பூகோளக் கூறான ஸ்கொட்லாந்து பிராந்தியம் பிரிந்து செல்வதாகக் கூறி தனது மக்களிடம் வாக்கெடுப்பை நடத்தியிருந்தது. தமிழ் நாட்டில் மிகவும் ஆதரவு பெற்ற ஒருவராக இருந்த முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் பதவியில் இருக்கும்போதே சிறைக்கு அனுப்பப்பட்டமை. அடுத்தது இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறலாம் என்ற செய்தியாகும்.

**உலகின் பல நாடுகளைப் பிளவுபடுத்தி ஆண்ட பிரித்தானியர்கள் தமது நாட்டில் பிரிவினைக் கோரிக்கை ஏற்படும்போது அதனை எவ்வாறு கையாள்கிறார்கள்?**

**சுமார் 300 ஆண்டுகளாக இணைந்து வாழ்ந்த ஸ்கொட்லாந்து பிரிவினையை நோக்கி ஏன் தள்ளப்பட்டது?**

**இங்கிலாந்து வாழ் தமிழர்கள் ஸ்கொட்லாந்து பிரிவினையை ஆதரிக்காதது ஏன்**




### இலங்கைத் தமிழர்களின் சந்தர்ப்பவாதம்

ஸ்கொட்லாந்தில் நடைபெற்ற வாக்கெடுப்பு தோல்வியில் முடிவடைந்த போதிலும், பிரிவினைக்கான அடிப்படைகள் மிகவும் உறுதியாக்கபட்டிருப்பதாக வாதிக்கப்படுகிறது. பிரிவினையா? அதிகாரப்பரவலாக்கமா? என்பது பிரதான விவாதமாக மாறியுள்ளது. இவ் விவாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ள முக்கியமான காரணங்கள் இலங்கை நிலமைகளுக்கு மிகவும் பொருத்தமானதாகவே உள்ளன. அதுமட்டுமல்லாமல் பிரித்தானிய சாம்ராஜ்யத்தில் குறிப்பாக இலண்டனில் செயற்படும் தமிழ் அமைப்புகள் இந்தத் தேர்தலின் போது மௌனமாக இருந்தமையை அவதானித்த போது அவர்களின் அரசியல் சந்தர்ப்பவாதம் அம்மணமாகத் தெரிந்தது. ஸ்கொட்லாந்து பிரிவினையை ஆதரிக்க முடியவில்லை ஏனெனில் பிரித்தானிய மத்திய அரசுடன் பகைத்துக் கொள்ளவோ, அல்லது தொழிற்கட்சி தமிழர்கள், கன்சவேட்டிவ் தமிழர்கள் என எப்படி தம்மை அழைத்துக் கொள்வது? மறுபுறத்தில் பிரிவினை வேண்டாம். ஐக்கிய ராஜ்யத்தில் தொடர்ந்து இருங்கள் எனக் கூறமுடியவில்லை. அவ்வாறானால் இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும் எனக் கோருவதுபோல் ஆகிவிடும் அல்லவா? அதிகாரப் பரவலாக்கத்தினை ஆதரிப்பதாக அமையும் அல்லவா?

**அன்பார்ந்தவர்களே!**

உலகின் பல நாடுகளைப் பிளவுபடுத்தி ஆண்ட பிரித்தானியர்கள் தமது நாட்டில் பிரிவினைக் கோரிக்கை ஏற்படும்போது அதனை எவ்வாறு கையாள்கிறார்கள்? என்பதை சற்று விபரமாகவே பார்ப்போம். முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் தனி அரசாக இருந்த ஸ்கொட்லாந்து போரின் வெற்றி காரணமாக இணைக்கப்பட்டது. இங்கிலாந்து, வட அயர்லாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்து என்பன இணைக்கப்பட்டு பெரிய பிரித்தானியா எனவும், ஐக்கிய ராஜ்யம் எனவும் அழைக்கப்பட்டது.

### ஸ்கொட்லாந்து பிரிவினைக் கோரிக்கை எழுந்தது ஏன்?

சுமார் 300 ஆண்டுகளாக இணைந்து வாழ்ந்த ஸ்கொட்லாந்து பிரிவினையை நோக்கி ஏன் தள்ளப்பட்டது? பிரித்தானியாவில் இரண்டு பாரிய கட்சிகள் மாறி மாறிப் பதவிக்கு வருகின்றன. இதில் தொழிற்கட்சி ஸ்கொட்லாந்தில் பலமான ஆதரவுத் தளத்தைக் கொண்டுள்ளது. இதற்குப் பிரதான காரணம் அங்கு காணப்படும் இயற்கை மூல வளங்களாகும். நிலக்கரி மிக அதிக அளவில் உள்ளது. இதுவே மின்சார உற்பத்தி, புகையிரதம், வெப்பமூட்டுதல் போன்றவற்றிற்கு பிரதான மூலப் பொருளாக இருந்தது. பாரிய நிலக்கரிச் சுரங்கங்களில் பல ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்தனர். அதே போன்று கப்பல் கட்டும் தொழிற்சாலைகள் நிறையவே உள்ளன. தொழில் நுட்ப அறிவு கொண்ட தொழிலாளர்கள் அங்கு காணப்பட்டனர். மீன்பிடியில் அதிக வளர்ச்சி, பின்னர் வட கடலில் எண்ணெய் வளம் என பட்டியல் நீண்டு செல்கிறது. இதனால் பல புதிய நகரங்கள் உருவாகின. மேலும் பல வேலை வாய்ப்புகள் அதிகரித்தன. தொழிலாளர்களின் வருமானம் அதிகரித்தது போலவே அவர்கள் தொழிற்சங்கங்களில் இணைந்து தமது பலத்தை மேலும் பெருக்கி அரசோடு போராடி தமது உரிமைகளை வென்றெடுத்தனர். இதன் காரணமாக தொழிற்கட்சி அங்கு பலமாக வேரூன்ற முடிந்தது. தொழிலாளர்கள் பலமாக இருந்தமையால் முதலாளித்துவத்தினை பலமாக ஆதரித்து நிற்கும் பழமைக் கட்சியான கன்சவேட்டிவ் கட்சி பதவிக்கு வரும்போதெல்லாம் தொழிலாளர்களை நசுக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

காலங்கள் உருண்டோடியது. பொருளாதார மாற்றங்கள், தொழில் நுட்ப மாற்றங்கள் ஏற்பட்டன. 1980களில் பிரித்தானியாவில் கன்சவேட்டிவ் கட்சி மாக்கரட் தச்சர் அவர்கள் தலைமையில் பதவிக்கு வந்தது. புதிய திறந்த பொருளாதாரக் கொள்கைகளை உலகின் பல பாகங்களில் நடைமுறைப்படுத்த ஊக்கப்படுத்தியது. உற்பத்தியை அதிகரிப்பதற்கு தடைகள் இருக்கக்கூடாது எனக் கூறியது. மூலப் பொருட்கள் தடையற்ற விதத்தில் பரிமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றது. சந்தைச் செயற்பாட்டில் அரசின் தலையீடு அவசியமற்றது. சட்டங்கள் தளர்த்தப்பட்டு சந்தைச் செய்ற்பாடுகள் சுயாதீனமாக்கப்பட வேண்டும் எனக் கூறியது. இதற்குத் தடையாக தொழிற்சங்கங்கள் இருப்பதாக கூறி தொழிற்சங்கங்கள் மேல் போரைத் தொடுத்தது. ஸ்கொட்லாந்து நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களை ஒடுக்கும் முகமாக பிறேசில் போன்ற நாடுகளிலிருந்து நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டது. ஒவ்வொரு குடும்பங்களில் இருப்பவர்களும் வரி செலுத்த வேண்டும் என சட்டம் கொண்டுவரப்பட்டது.

இதனால் சுரங்கத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். சுரங்கங்கள் பல மூடப்பட்டன. புகையிரதம் மின்சாரத்தைப் பயன்படுத்துவதாக மாற்றப்பட்டது. நிலக்கரிக்குப் பதிலாக அணு உலைகள் மின்சாரத்தை உற்பத்தி செய்தன. தொழில் வாய்ப்புகளை இழந்த மக்கள் மாற்றுத் தொழிற்பயிற்சி பெற முடியாத நிலையில் இருந்தார்கள். வருமானம் குறைந்தது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தது. குடும்பங்கள் வேறு வேலை தேடி மாற்று இடங்களுக்கு இடம் பெயர்ந்தார்கள். இதனால் பல பிரதேசங்கள்களை இழந்தவைகளாக மனித சஞ்சாரமற்ற பகுதிகளாக வெறிச்சோடின. வருமானம் அற்று பெரும் வாழ்க்கைப் போராட்டத்தை நடத்தும் மக்கள் மீது வரிச் சுமைகள் அதிகரிக்கப்பட்டன.

மிகவும் இயற்கை வளமும், மூல வளமும் செறிந்த ஸ்கொட்லாந்து மக்கள் பொருளாதார பின்னடைவை நோக்கிச் செல்வதற்குக் காரணம் ஐக்கிய ராஜ்யத்தில் இருப்பதால் வெஸ்ற் மின்ஸ்ரர் பாராளுமன்றத்தின் தவறான பொருளாதாதாரக் கொள்கைகளுக்கு தாமும் பலியாவதாக குற்றம் சுமத்தினார்கள். எனவே ஸ்கொட்லாந்து தனது விவகாரங்களைக் கவனிக்கும் விதத்தில் அதிகாரப் பரவலாக்கத்தை மேற்கொள்ள வேண்டுமென தொழிற்கட்சி யோசனை கூறியது. ஆனால் ஸ்கொட்லாந்தின் பிரிவினை மூலமே அது சாத்தியமாகும் என ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி வற்புறுத்தியது. 80 களில் தொடங்கிய கன்சவேட்டிவ் கட்சி அரசு 1977 வரை நீடித்தது. கன்சவேட்டிவ் கட்சியின் திறந்த பொருளாதாரக் கொள்கைகளும், சுகாதாரம், கல்வி என்பனவற்றிற்கு வழங்கப்பட்ட மானியங்களும் குறைக்கப்பட்டதால் பிரிவினைக் கோரிக்கையும் பலமாக வளர்ந்தது. 77இல் ரொனி பிளேயர் தலைமையில் தொழிற் கட்சி அரசு பதவிக்கு வந்ததும் அதிகாரப் பரவலாக்கத்தை வழங்கியது. தனியான பாராளுமன்றம் அமைந்தது. தொழிற்கட்சியும் நீண்ட காலம் பதவியில் நீடித்ததோடு திறந்த பொருளாதாரக் கொள்கைகளை தொடர்ந்தும் பின்பற்றியதால் ஸ்கொட்லாந்தில் தொழிற்கட்சியின் ஆதரவும் சரிந்தது. அதன் காரணமாக பிரிவினையைக் கோரிய ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி பதவியைக் கைப்பற்றியது.

### அமைதியான தேர்தல் ஜனநாயக முறைப்படி தீர்வு

ஸ்கொட்லாந்து நிர்வாகத்தைக் கைப்பற்றிய அத் தேசியக் கட்சி பிரிவினையை முன் வைத்து பிரசாரத்தை மேற்கொண்டது. மத்தியில் தற்போது ஆட்சியில் உள்ள கன்சவேட்டிவ் கட்சியுடன் பிரிவினைக் கோரிக்கைக்கான தேர்தலை நடத்தும் நாளையும் நிர்ணயித்தது. பிரிவினையை ஆதரித்து ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி பிரச்சாரத்தை மேற்கொள்ள, இணைந்து செல்வதை வற்புறுத்தி பிரித்தானியாவின் பிரதான கட்சிகளான கன்சவேட்டிவ், தொழிற் கட்சி, லிபரல் ஜனநாயகக் கட்சி என்பன இணைந்து பிரசாரம் செய்தன.

இப் பிரசாரம் காரசாரமாகவும், ஜனநாயக வழிமுறையிலானதாகவும் அமைந்திருந்தது. பிரிவினையை சுயாதீன வாக்கெடுப்பின் மூலம் பெறும் ஓர் வரலாற்று நிகழ்வாகவும் அமைந்தது. வன்முறைகள் எதுவுமற்ற ஓர் ஜனநாயக வேள்வி அதுவாக அமைந்தது. இணைந்து வாழவேண்டும் என ஐக்கிய ராஜ்யத்தின் கட்சிகள் அதற்கான வழிமுறைகளை முன்வைத்தன. இவைதான் எமது கவனத்திற்கு உரியவை. 300 வருடங்களுக்கு மேலாக இணைந்து இறுக்கமான பொருளாதாரக் கட்டமைப்பைக் கொண்டிருக்கும் ஸ்கொட்லாந்து திடீரென பிரிந்து செல்வது பெரும் பொருளாதாரத் தாக்கத்தினை இரு தரப்

(தொடர்ச்சி 6 ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் 50 ஆண்டு

-குமார்-


### பொய் வாக்குறுதிகளோடு அழைத்துவரப்பட்ட மக்கள்

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த இலங்கையில் தேயிலை. இறப்பர் பெருந்தோட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டவேளை இந்தத் தோட்டங்களுக்கு குறைந்த ஊதியத்துடன் தொழிலாளர்கள் இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து அழைத்துவரப்பட்டனர். அன்று ஐந்து ஆண்டுகள் ஒப்பந்தம் மூலம் இத் தொழிலாளர்கள் பெரிய கங்காணிமார்கள், தரகர்கள் மூலம் இங்கு கொண்டுவரப்பட்டார்கள். மத்திய மலைப் பிரதேசங்களில் செறிந்து வாழும் இவர்களே இன்று மலையக மக்கள் என அழைக்கப்படுகின்றனர். அன்று ஐந்து ஆண்டுகால ஒப்பந்தத்தினடிப்படையில் அதாவது ஒரு குறித்த காலத்திற்கு பின்பு மீண்டும் அவர்கள் தங்கள் தாய்நாடான தமிழகத்துக்குத் திரும்பிச் செல்லலாம் என்ற அடிப்படையிலேயே வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். அவ்வாறு வேலைக்கு அமர்த்தப்பட்ட இம் மக்கள் ஒரு தோட்டத்திலிருந்து வேறொரு தோட்டத்துக்கோ வேறு இடங்களுக்கோ சென்றால் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்து மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்ட இடங்களில் அவர்களை இருக்க வைக்கலாம் என்ற நியதியும் காணப்பட்டது.

### சிங்கள தமிழ் இனவாதிகளின் வஞ்சனையும், ஒப்பந்தங்களும்

பிரித்தானியர்கள் இலங்கையை விட்டு வெளியேறியபோது தமிழ், சிங்கள இனவாதிகள் மலையகத் தமிழர்களை இந்தியாவுக்கே திருப்பி அனுப்ப வேண்டும் என்றார்கள். 1948ம் ஆண்டு இல: 15 இலங்கை குடியுரிமைச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன் அடிப்படையில் 1948 ம் ஆண்டு நவம்பர் 15ம் திகதிக்கு முன் இலங்கையில் பிறந்திருப்பதுடன் அவர்களது இரண்டு தலைமுறையினர் இலங்கையில் பிறந்திருந்தால் மட்டுமே ஒருவர் இலங்கை குடியுரிமை பெற உரித்துடையவர் என வரையறுக்கப்பட்டது. அவ்வாறு பிறந்த இந்திய தமிழர்கள் இருந்த போதும் அதனை நிரூபிப்பதற்கான ஆவணங்கள் அவர்களிடம் இல்லாததால் அவர்கள் நாடற்றவர்கள் என்ற நிலைக்கே தள்ளப்பட்டார்கள். 1949ம் ஆண்டு இலங்கை நாடாளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டம் இல: 48 மூலம் இவர்களது வாக்கு உரிமையும் பறிக்கப்பட்டது. நாடற்றவர்கள் பிரச்சினை தொடர்பாக 1949ம் ஆண்டு இந்திய - பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டம், 1954 நேரு- கொத்தலாவல ஒப்பந்தம் என்பன நாடற்றவர்கள் பிரச்சனையை தீர்க்க முடியாமல் போய்விட்டது. இலங்கை குடியுரிமை பெற தகுதியற்றவர்கள் அனைவரையும் இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற இலங்கையின் நிலைப்பாட்டுக்கு இந்தியா மறுப்புத் தெரிவித்ததுடன் இந்திய குடியுரிமை கோருபவர்கள் மட்டுமே இந்திய குடியுரிமை பெறலாம் என்றது. இந்தப் பிரச்சனை இழுபறிநிலையில் காணப்பட்டது. பெரும்பாலான இந்திய நாடற்றவர்கள் இலங்கையிலேயே வாழ விரும்பினர். நிலையற்ற தமிழர்களின் பிரச்சினை பற்றி முடிவு காண்பதற்காக இரு நாட்டு பிரதமர்களுக்கிடையிலான சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் 30 அக்டோபர் 1964 இல் செய்துகொள்ளப்பட்டது. அதன்படி நாடற்றோர் எண்ணிக்கை சுமார் 975,000 என மதிப்பிடப்பட்டது. அவற்றில் 525,000 பேரை இந்தியா ஏற்றுக்கொள்வதாகவும், 300,000 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்குவதாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 150,000 பேர் சம நிலையாக காணப்பட்டனர் அவர்களை இந்தியாவும் இலங்கையும் பகிர்ந்து கொள்வதாகவும் முடிவாகியது. சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் நோக்கம் இலங்கை குடிமக்கள் அல்லது இந்திய குடிமக்களாக அங்கீகாரம் இல்லாது இலங்கையில் உள்ள அனைத்து இந்திய வம்சாவளி நபர்களும் இலங்கை அல்லது இந்திய குடிமக்கள் ஆக வேண்டும் என்பதே.







சுதந்திரத்திற்குப் பின்னான இலங்கையில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் இந்திய தமிழர்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பிறகு இடம்பெற்ற சிங்கள தமிழ் இனவாதிகளின் செயற்பாடுகளே இம் மக்களின் குடியுரிமை வாக்குரிமை பறிப்புக்கு பிரதான காரணமாக அமைந்தன. இலங்கையின் மொத்த சனத்தொகையில் 1911ம் ஆண்டு இந்தியத் தமிழர்கள் 12.9 வீதமாகவும் இலங்கைத் தமிழர்கள் 12.8 வீதமாகவும் 1921 ம் ஆண்டு இந்திய தமிழர்கள் 13.4 வீதமாகவும், இலங்கை தமிழர்கள் 11.5 வீதமாகவும் காணப்பட்டதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் இன்றைய நிலையை போல அவர்கள் தமிழர்கள் என்றோ பெரும்பான்மையான மக்கள் தொகையை கொண்ட தொழிலாளர்கள் என்றோ எவரும் நினைக்காது இந்தியர்கள் என்பதற்காக ஒன்றிணைந்து செயற்பட்டமை வரலாறு.

1987 இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் இந்த விடயத்தில் இந்தியர்களுக்கு எதிரான கோஷமே அடித்தளமாகக் காணப்பட்டது. அதன் எதிரொலி தென்பகுதி சிங்கள இனவாதிகள் மட்டுமல்ல இலங்கை தமிழர்களும், குறிப்பாக விடுதலைப் புலிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டு இலங்கை தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படாது போய்விட்டமை துக்ககரமான நிகழ்வாகும். இம் மக்கள் சமூகத்தைக் கொண்டு வருதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம். இவர்களது குடியுரிமை, வாக்குரிமையைப் பறிப்பதற்கு தமிழ், சிங்கள முதலாளித்துவ சக்திகள் செய்துகொண்ட ஒப்பந்தம். இவர்கள் நாடற்றவர்களான பிறகு இவர்களை இரு நாடுகளும் பங்கு போட்டு கொடுக்கல் வாங்கல் செய்வது போலான ஒப்பந்தங்கள். இறுதியில் குடியுரிமை, வாக்குரிமை வழங்குவதற்கான 1986 ஒப்பந்தம். தற்போது சம்பள கோரிக்கைக்கு ஒப்பந்தம், தேர்தலில் தங்கள் ஆட்சியை தக்க வைப்பதற்கான ஒப்பந்தம் என நீண்டுகொண்டே செல்கிறது.

### அடிப்படை உரிமைகள் பறிப்பும் பிரதேசவாதத்தின் பாதிப்பும்

இலங்கையின் மக்கள் தொகையில் 6 வீதத்தைக் கொண்ட இவர்கள் இலங்கையின் மத்திய, ஊவா பகுதிகளில் பெரும்பான்மையாக காணப்பட்டாலும் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் எல்லைப்புறங்களில் மிகவும் அச்சத்துடன் நிரந்தரமாகக் கீழ்படிந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

குடியுரிமையானது ஒரு நாட்டிலுள்ள பிரஜையின் அடிப்படை உரிமையாகும். அது அவர்களின் அடையாளம். அதை பறித்ததானது அம் மக்களின் அரசியல், சிவில், பாதுகாப்பு, மற்றும் அடிப்படை உரிமைகளை பறித்தமைக்கு ஒப்பானதாகும். ஒரு நாட்டிலிருந்து இன்னோர் நாட்டுக்கு குடிபெயரும் போது அவர்கள் அந்த நாட்டின் பிரஜைகள் என கணிக்கப்படுகின்றனர். உடனடியாக குடியுரிமை வழங்கப்படாவிட்டாலும் அவர்கள் அங்கு வாழ்வதற்கான வாழ்வுரிமை வழங்கப்படுகின்றது. ஆனால், இலங்கையில் அவ்வாறன நிலைமைகள் இருந்ததில்லை.

இலங்யில் 1983 இற்கு முன்னதாக பெரிய எண்ணிக்கையிலான அகதிகள் பிரச்சினை ஒப்பந்தங்கள் மூலம் முடிவுக்கு வந்த போதிலும் 1983 ஜுலை வன்முறையின் பின்னர் பெரும்பாலான இந்திய வம்சாவழி மக்கள் தங்கள் பூர்வீக நாடான இந்தியாவிற்கு செல்வதையே விரும்பினர். கணிசமானவர்கள் இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு- கிழக்கு பகுதியிலும் குடியேறினர். இப் பிரதேசங்களில் இந்த மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே பார்க்கப்படுகின்றனர். நடாத்தப்படுகின்றனர். இன்றும் இங்கு பிரதேசவாதம் காணப்படுகின்றமை இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படுவது தொடர்பாக கேள்விகளை எழுப்பி நிற்கிறது.

### பிந்திக்கிடைத்த நீதி

1988ம் ஆண்டு இலங்கை பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சட்டத்தின் மூலம் பிரஜாவுரிமை வழங்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இலங்கையில் உள்ள நாடற்ற இந்திய வம்சாவளியினர் அனைவருக்கும் இந்தச் சட்டத்தின் கீழ் பிரஜாவுரிமை உண்டு ●

# ஜெயலலிதா கைது கதறி அழுதனர் தொண்டர்கள்

(ஸ்ரனிஸ் - சென்னை)



1991 முதல் 1996 வரை ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது வருமானத்துக்கு அதிகமாக சொத்துச் சேர்த்ததாக தொடரப்பட்ட வழக்கில் அவருக்கும், அவரது உதவியாளர்களான சசகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கும் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு பலரையும் புருவம் உயர்த்த வைத்துள்ளது.

இந்த தீர்ப்புத் தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்ற வண்ணமே உள்ளது. எது எப்படியோ சட்டத்தின் அடுத்த படிமுறைகள் இருக்கும் போது எதனையும் அவசரப்பட்டுச் சொல்லிவிட முடியாத நிலமைகள் உள்ளன.

இது ஒரு தனி நீதிமன்றத்தாலேயே நிரூபிக்கப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு அடுத்த கட்டங்களாக உயர் நீதிமன்றம் உச்ச நீதிமன்றம் என்ற படிமுறைகள் உள்ளன. இதனால் அவர் தனக்குக் கொடுத்த தீர்ப்புத் தொடர்பாக முறையிட வாய்ப்புகள் உள்ளன.

இத் தீர்ப்புத் தொடர்பாகத் தமிழக அரசியலில் ஒரு இடைவெளி ஏற்பட்டுள்ளதாக பலர் கூறி வருகின்ற போதும் "அம்மா" மீண்டும் இருந்ததை விடவும் பன்மடங்காகப் பலம் பெற்று வருவார் எனக் கூறுபவர்களும் உள்ளார்கள். இந்தியாவில் ஊழலுக்கு எதிரான பல அமைப்புகள் உருவாகி ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ள இந்த காலகட்டத்தில் இந்தத் தீர்ப்பு முக்கியமாகப் பார்க்கப்படுகிறது.

இந்த வழக்கின் தீர்ப்புச் சரியே எனக் கூறுபவர்கள் இனி ஊழலில் ஈடுபட எவரும் சற்று யோசிப்பார்கள் என தங்களது வாதங்களை ஆணித்தரமாக முன்வைக்கிறார்கள்.

எது எப்படியோ ஊழல் என்பது ஒரு தொற்றுப் போல இந்தியாவில் ஏற்பட்டுள்ளது. எதிலும் ஊழல் எங்கும் ஊழல் என்ற நிலைமை. ஊழல் செய்யாத கட்சிகளே இல்லை என்ற அளவுக்கு கட்சிகளின் மேல் வழக்குகள் உள்ளன.

ஊழலுக்கு எதிராகப் பலரிடம் விழிப்புணர்வும் உள்ளது. இருந்தும் இதையும் மீறி ஏதோ ஒரு வகையில் ஊழல் நடந்தேறி விடுவதும் அதே ஊழல்வாதிகளை மக்கள் தூக்கியெறியாமல் மீண்டும் மீண்டும் தங்களது பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுப்பதும் வாடிக்கையாக உள்ளது.

ஜெயலலிதாவின் அபார வளர்ச்சியைக் கண்டு பொறுக்க முடியாமல் பொய்வழக்குப் போட்டு விட்டார்கள் அவர் இதனை உடைத்து வெளியே வருவார் எனக் கூறுபவர்களும் உண்டு.

ஜெயலலிதா அவர்களால் முன்வைக்கப்பட்ட பல நலத்திட்டங்களை நாம் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது. அவர் பல நலத்திட்டங்களை இலங்கை அகதிகளுக்கும் விரிவுபடுத்திச் செயற்படுத்தி வருகிறார்.

"அம்மா உணவகம்" ஏழைகளுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்றால் அது மிகையல்ல. இந்தத் திட்டத்தை இன்று இந்தியாவில் உள்ள பல மாநிலங்களில் செயற்படுத்த முயற்சிகள் நடக்கின்றன. அம்மா தண்ணீர், மலிவுவிலை காய்கறி அங்காடி, அம்மா உப்பு, மலிவுவிலை சிமெண்ட், என நடுத்தர, ஏழை மக்களும் இந்தப் பணக்கார யுகத்துடன் போட்டி போட்டு வாங்க முடியாத பொருட்களை வாங்கும் அளவுக்கு நல்ல திட்டங்களாக வரவேற்கப்படுகின்றன.

பல ஊழல் வழக்குகளில் சிக்கி வழக்குகளை எதிர் நோக்கியுள்ளவர்கள் இது தொடர்பான கருத்துக்களை கூற விரும்பாதவர்களாக உள்ளனர். குறிப்பாக 2 ஜி வழக்கில் சிக்கியுள்ள தி.மு.க வை எடுத்துக்காட்டாகக் கூறமுடியும்.



அ.தி.மு.க கட்சிக்காரர்களின் உணர்வுகளை மதிக்க வேண்டிய தருணமும் உள்ளது. கட்சியை மிகவும் கட்டுப்பாடாக வைத்திருந்த அவர்களது தலைவியின் நிலைமை கண்டு அமைச்சர்கள் முதல் தொண்டர்கள் வரை கண்ணீர் விட்டனர். கதறி அழுதனர். அவர்களின் தலைவி கட்சியையும், கட்சியினரையும் அன்புடனும், பண்புடனும் நடத்தியுள்ளார் என்பதற்கு அவர்களது கண்ணீரே சாட்சியானது.

இந்த நிலவரங்களை பார்த்த மற்றய கட்சி தலைவர்கள் என்ன நினைத்தார்களோ? ஆனால், ஒரு தலைவர் கட்சி உறுப்பினர்களிடம் அன்புடனும், பாசத்துடனும் இருந்தால் மட்டுமே அத்தகைய ஒரு நெகிழ்ச்சி ஏற்படும்.

ஜெயலலிதா மீதான தீர்ப்பு, இதனால் ஏற்பட்ட அசாதரண நிலமையை சிலர் பயன்படுத்த நினைக்கிறார்கள். அதனாலேயே அவர்கள் தமிழகத்தில் அ.தி.மு.க வினர் வன்முறையைக் கட்டவிழ்த்து வருகிறார்கள் எனக் கூறி கவர்னர் வரை சென்று புகார் கொடுத்துள்ளார்கள்.

ஜெயலலிதாவின் அசுர வளர்ச்சி மற்றும் அவர் தொடர்ந்து பல தேர்தல்களில் வெற்றி பெற்றது. வரவிருக்கும் 2016 சட்டசபைத் தேர்தலிலும் வெற்றிவாய்ப்பு என்ற நிலைமைகளைப் பார்க்கும் போது எதிர்க்கட்சினர் மேல் சொல்லப்படும் குற்றச் சாட்டுக்களை புறம்தள்ளவும் முடியாது.

இனி ஜெயலலிதா அ.தி.மு.க வின் பொதுச் செயலாளராக இருப்பதற்கான அதிக வாய்ப்புகளே உள்ளன. முதல்வராக எப்போ வருவார்?

அரசியலில் இருப்பவர்கள் இலகுவில் ஏதோ ஒரு விதத்தில் சம்பாதித்து விடுகிறார்கள் என்ற எண்ணம் மக்களிடம் வெகுவாகப் பரவியுள்ளது. ஒரு கட்சியில் சாதாரண பதவியில் இருப்பவர் கட்சியில் சேர்ந்த சொற்ப காலத்தில் கார், பங்களா என வாழ்கிறார் என்றால் இது எப்படி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சமூகம் முன்நோக்கி நடைபோடத் தடைகள்

தமிழர்கள் ஒன்றுபட்டு ஓரணியில் நிற்க வேண்டும் என்று கோருபவர்கள் ஒரு பகுதி தமிழர்களுக்கு அநீதிகள் செய்யும் மறுபகுதி தமிழர்களின் அநியாயங்களைத் தடுத்து நிறுத்துவதற்காக எங்காயினும் ஏதாவதாயினும் உருப்படியாகச் செய்கிறார்களா? முக்கியமாக வன்னியின் அரச நிர்வாக காரியாலயங்களையும் பள்ளிக்கூடங்களையும் நிறைத்து நிற்கும் யாழ்ப்பாண பெருங்குடியினர் வெறுமனே பின்தங்கிய விவசாயபிரஜைகளாக வன்னிமக்கள் இருந்தாற்போதும் என்ற கணக்கிலேயே செயற்படுகின்றனர்.



அ.வரதராஜப்பெருமாள்

வடக்கு கிழக்கு இலங்கையில் அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான போர் முடிந்து ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது.
அதாவது ஆயுதப் புலிகள் முற்றாக அழிந்து ஐந்தாண்டுகள் ஆகிவிட்டன.

### மாற்றங்கள் முன்னேற்றங்கள்

கடந்த ஐந்தாண்டுகளாக போரில்லை என்பதால், சண்டைக்குள் அகப்பட்ட சாவுகள் இல்லை:
பள்ளிக்கூடங்களுக்கு மாணவர்கள் அச்சமின்றிச் சென்று வருகிறார்கள்:
எறிகுண்டுச் சாவுப் பயமின்றி மக்கள் சந்தைகளுக்குச் சென்று வருகிறார்கள்:
நகரங்களில் வர்த்தகங்கள் சுறுசுறுப்பாக நடைபெறுகின்றன:
கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் பதினாறு சில்லுகள் கொண்ட லாறிகள் உட்பட எல்லாப் போக்குவரத்துகளும் தடையின்றி நடைபெற்று வருகின்றன:
தலையிடியென்றாலும் மக்கள் வைத்திய சாலைகளுக்குத் தடையின்றிச் சென்று வருகின்றனர்:
ஒப்பீட்டு ரீதியில் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் மலிவாகவே கிடைக்கின்றன:
யாழ்ப்பாணத்தில், இறக்குமதிப் பொருட்களின் விலைகள் கூட கொழும்போடு ஒப்பிடுகையில் விலை வேறுபாடுகள் ஏற்கத்தக்க அளவிலேயே உள்ளன.
யுத்தகாலத்தோடு ஒப்பிடுகையில் இவை பெரும் வேறுபாடுகள் - மாற்றங்கள் - முன்னேற்றங்கள்.

அரசாங்க நிர்வாகக் கட்டிடங்கள், பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள், மோட்டார் வாகன போக்குவரத்து வீதிகள், அவ் வீதிகள் எங்கும் உள்ள பாலங்கள் எல்லாம் மீள அமைக்கப்பட்டு விட்டன:
அவைகளெல்லாம் முன்னெப்போதும் இருந்திராத அளவுக்கு திறம்பட அமைக்கப்பட்டுள்ளன. முன்னெப்போதும் இருந்திராதவைகளும் இப்போது கட்டப்பட்டுள்ளன:
வடக்கு கிழக்கில் வாகனங்களின் எண்ணிக்கையும், வங்கிக் கிளைகளின் எண்ணிக்கையும், தொலைபேசிகளின் எண்ணிக்கையும், ஆச்சரியங்களை ஏற்படுத்தும் வகையில் அபரிமிதமாக அதிகரித்துள்ளன.

1983க்கு முன்னர் வடக்கு கிழக்கில் இருந்த வீடுகளில் மூன்றில் இரண்டுக்கு மேல் ஓலைக் குடிசைகளே. ஆனால், இப்போது மூன்றில் இரண்டுக்கு மேல் கல் வீடுகளாகியுள்ளன:
வீதிகளெல்லாம் அகலமாகிவிட்டன:
வர்த்தகர்கள் பலர் பதிய வடிவில் தமது கடைகளைக் கட்டி எழுப்பியுள்ளனர்:
ரெஸ்ரோறண்ட் கலாச்சாரம் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து விரிவடைந்து கொண்டிருக்கின்றது:
இப்போது கொழும்பு - யாழ்ப்பாணம் மற்றும் கொழம்பு - தலைமன்னாருக்கிடையில் ரயில்களின் போக்குவரத்துச் சேவைகள் விரைவில் நடப்பதற்கான வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### திருப்தியுறாத சமூகத் தலைமை

ஆனாலும், இந்த விடயங்களால் தமிழ் அரசியற் பிரமுகர்கள் மட்டத்திலோ அல்லது தமிழ் சமூக மற்றும் சமயப் பிரமுகர்கள் வட்டத்திலோ அல்லது தமிழ் அறிவார்ந்தோரிடையேயோ இந்த மாற்றங்கள் - முன்னேற்றங்கள் தொடர்பாக ஒரு திருப்தியையோ அல்லது ஓர் உற்சாகத்தையோ காண முடியவில்லை.

ஆனால் தமிழ்ப் பொதுமக்களோ தங்கள் அன்றாட வாழ்க்கையின் முன்னேற்றங்களுக்காக அச்சமின்றி தன்னம்பிக்கையோடு தமது எல்லாக் காரியங்களிலும் சுறுசுறுப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**வடக்கு கிழக்குத் தமிழர்களிற் பெரும்பான்மையினர் தேர்தல்களில் அரசாங்கத்துக்கு எதிராக வாக்குகளைப் போட்டாலும், தமிழ்ப் பொதுமக்களும் தமிழ் வர்த்தகர்களும் உற்பத்தியாளர்களும், தமிழ் இளைஞர்களும் மாணவர்களும் எப்போதோ யுத்தகால மனோநிலைகளிலிருந்தெல்லாம் மீண்டு தமது எதிர்கால முன்னேற்றங்களை இலக்காகக் கொண்டு பல்வேறு முனைகளில் முன்னோக்கி நடந்து கொண்டிருக்கிறார்கள்.**

**ஆனால், தமிழ் அரசியல் சமூக அறிவார்ந்த பிரமுகர்கள் மட்டும் இன்னமும் தமது யுத்தகால நடத்தைகளையே கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். மேடைகளிலும் பத்திரிகைகளிலும் ஒப்பாரிகளும், ஓலங்களுமே.**

யுத்தம் முடிந்து எத்தனை தடவைகள் வடக்கு கிழக்கில் தேர்தல்கள் நடந்து முடிந்து விட்டன.

“உலகம் எமது கையடியில் நிற்கிறது”, “இந்தியா எமது தோளோடு தோள் கொடுத்து நிற்கிறது”, “ராஜபக்ஷாக்களை எமது காலடியில் விழும் நிலைக்குக் கொண்டு வந்து விட்டோம்”. “தமிழ் மக்களே நீங்கள் உங்கள் வாக்குகளை மட்டும் தந்து விட்டால் எல்லாவற்றையும் சாதித்து விடுவோம்” என்று அடுக்கடுக்காக தமது பலங்கள், வளங்கள், ஆற்றல்கள் பற்றி மாறி மாறித் தமிழ் மக்களுக்கு அள்ளியெடுத்து விட்டு தமிழ் மக்களின் வாக்குகளை அடுத்தடுத்து ஆண்டு தோறும் கொள்ளை கொள்ளும் தமிழ்த் தேசிக் கூட்டமைப்புக்காரர்கள் இன்னமும் அந்த ஒப்பாரிக் கோலங்களிலிருந்து தம்மை மாற்றிக் கொள்ளவில்லை.

*தமிழ்ச் சமூகம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் அவலங்களை நீக்குவதற்காக, வீழ்ந்து கிடக்கும் தமிழ்ச் சமூகத்தை நிமிர்த்தி எழுப்புவதற்காக,*
*தமிழ்ச் சமூகத்தில் இன்னமும் நிலவும் ஜனநாயக விரோதப் போக்குகளை நீக்கி மாற்றுக் கருத்துகள் ரீதியிலும் மாற்றுச் சிந்தனைகள் ரீதியிலும் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குதற்காக,*
*தமிழ்ச் சமூகத்தை சமூக பொருளாதார அரசியல் ரீதியாக முன்னோக்கி நடைபோடச் செய்வதற்காக இவர்கள் என்ன செய்கிறார்கள்? ஏதாவது செய்கிறார்களா?*

### நிகழ்ந்துவரும் அதிசயங்கள்

அரசியற் கண்ணை மூடிக் கொண்டு பார்த்தால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதிசயிப்பதற்கு நூற்றுக்கணக்கான விடயங்கள் நடந்திருக்கின்றன, தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எங்கே நோக்கி இந்த மாற்றங்களெல்லாம் தமிழ்ச் சமூகத்தை கொண்டு செல்லுகின்றன என்று இப்போதைக்கு சரியாகக் கணிக்க முடியாவிட்டாலும் இப்போதைக்கு அதிசயங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

அரசியல் மற்றும் அரச படைகளின் பரந்து விரிந்த பிரசன்னம் என்பவற்றை ஒருபுறம் ஒதுக்கி விட்டுப் பார்த்தால்,

கிழக்கு மாகாணம் இயல்பு நிலைக்கு எப்போதோ வந்துவிட்டது. அது இப்போது அதனது பொருளாதார முன்னேற்றங்களில் நகர்ந்து கொண்டிருக்கின்றது.
அதேபோல, வன்னியைப் பார்த்தால் முக்கித் தக்கி இயல்பு நிலையை அடைய முனைந்து கொண்டிருக்கின்றது.

### வன்னியும் யாழ்ப்பாணமும்

வன்னியின் உடனடியான பிரச்சினைகளுக்கான நடைமுறைத் தடைகள் சிறீலங்கா அரசிடமிருந்து எழுவதை விட தமிழ்ச் சமூகத்துக்குள்ளேயே அதிகமாக உள்ளன.

*முக்கியமாக வன்னியின் அரச நிர்வாக காரியாலயங்களையும், வன்னிப் பிள்ளைகளுக்கான பள்ளிக்கூடங்களையும் நிறைத்து நிற்கும் யாழ்ப்பாணப் பெருங்குடியினர் வெறுமனே பின்தங்கிய விவசாய பிரஜைகளாக வன்னிமக்கள் இருந்தாற் போதும் என்ற கணக்கிலேயே செயற்படுகின்றனர்.*
*தமிழர்கள் ஒன்றுபட்டு ஓரணியில் நிற்க வேண்டும் என்று கோருபவர்கள் ஒரு பகுதி தமிழர்களுக்கு அநீதிகள் செய்யும் மறுபகுதி தமிழர்களின் அநியாயங்களைத் தடுத்து நிறுத்துவதற்காக எங்காயினும், ஏதாவதாயினும் உருப்படியாகச் செய்கிறார்களா?*

வடக்கு கிழக்கின் ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடுகையில், கொழும்பு வர்த்தக முதலீடுகளும் கட்டிடத் தொழில் நுட்பங்களும் யாழ்ப்பாணத்தை நோக்கியே நிறைந்துள்ளன.

மேலைத்தேய நாடுகளில் புலம்பெயர்ந்தோரில் மிகப் பெரும்பாலோர் யாழ்ப்பாணத்தவர் என்பதால் அவர்களின் உதவிகளால் யாழ்ப்பாணத்து கோவில்களெல்லாம் நல்லூர் கட்டிடக் கலையைப் பின்பற்றி புதுமை பெற்றுள்ளன.

அவர்கள் தமது உறவிர்களின் வாழ்வாதார உதவியாக அடிக்கடி பணம் அனுப்புவதோடு ஒவ்வொரு விடுமுறை தோறும் யாழ்ப்பாணம் வந்து உற்றார் உறவினர்களைச் சந்தித்து, கோவிற் திருவிழாக்களிலும் பங்குபற்றி, தமது பணப் பைகளோடு யாழ்ப்பாண நகரங்களின் கடைத் தெருக்களில் தாராளமான கொள்வனவுகளையும் மேற்கொள்வதால் யாழ்ப்பாணத்து வர்த்தகம் வளம் பெறுகிறது, வங்கிப் பரிமாற்றங்கள் பெருமளவில் நடைபெறுகின்றன. இந்த வாய்ப்பு வடக்கு கிழக்கின் ஏனைய மாவட்ட மக்களுக்கு மிகக் குறைவாகவே கிடைக்கின்றன.

யாழ்ப்பாணத்தவர்களுக்கு இப்போது மாகாண சபையும் கிடைத்துள்ளது, உள்ளூராட்சி சபைகளிலும் பல நூற்றுக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். இதனாலும் யாழ்ப்பாணத்தில் பெருந்தொகையில் பணமும் வாகனங்களும் நடமாடுகின்றன. வடக்கு மாகாணத்துக்கான அரச நிதியும் யாழ்ப்பாணத்தினாலேயே அதிகமாக உறிஞ்சப்படுகின்றது. வன்னியிலிருந்தும் பெருந்தொகை அரச சம்பளங்கள் யாழ்ப்பாணச் சந்தைகளிலேயே புரளுகின்றன.

கிழக்கு மாகாணத்திலும் மாகாண சபை இருக்கின்றது. அங்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள்தான் எதிர்க்கட்சியாக உள்ளனர். ஆனாலும் இப்போது கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் யார் என்று யாழ்ப்பாணத் [illegible] ஒரு சில நூறு பேருக்காயினும் தெரியுமா என்பதில் எனக்குச் சந்தேகமே. அந்த அளவுக்கு கிழக்கு மாகாணம் வடக்குக்காரர்களின் மனங்களிலிருந்து தூரப் போய்விட்டது.

வடக்கு கிழக்கு இணைப்பைக் கோருகின்ற அரசியற் சுலோகம் தூரப் போய்க் கொண்டிருக்கும் இடிமுழக்கமாக ஒலியிழந்து கொண்டிருக்கின்றது.

யாழ்ப்பாணப் பெருங்குடியினருக்கு வன்னியும் வன்னிமக்களும் இரண்டாம்தரப் பிரதேசமும் இரண்டாம்தரப் பிரஜைகளுமே. வன்னிக்கென ஓங்கி ஒலிக்க ஓர் அரசியற் குரலில்லை. வன்னித் தமிழ் அரசியல் வாதிகளின் குரல்கள் வன்னியின் குறைகளை நிறைவு செய்யவென எந்த வேளையிலும் ஒலிப்பதில்லை. மாறாக மன்னார் ஆயரின் குரல் உட்பட வன்னிப் பிரமுகர்களின் குரல்களும் யாழ்ப்பாண அரசியலுக்கும் நலன்களுக்கும் ஒத்தாசையாகவே ஒலிக்கின்றன. ●

## பிரிவினையா? அதிகாரப்ப..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பிலும் ஏற்படுத்தும் என்பதை தெரிந்திருந்தும், அது எந்த அளவில் அமையும் என்பதை தெரியாததால் பெரும் அச்சம் பலரின் மத்தியிலே காணப்பட்டது. இந்த அச்சமே அதிகாரப் பரவலாக்கம் என்ற கோட்பாட்டைப் பலப்படுத்துவதற்கு காரணியாக அமைந்தது. பிரித்தானிய பிரதான கட்சிகள் அதிக அதிகாரங்களைப் பகிர்வதாக வாக்குறுதி அளித்தன.

தேர்தல் அமைதியாக இடம்பெற்றது. மக்கள் பேசினார்கள். மிகவும் தெளிவாக தமது முடிவை அறிவித்தார்கள். பிரிவினைக்கு ஆதரவாக 16 லட்சம் (1,617,989) மக்களும், இணைந்து வாழ்வதற்கு ஆதரவாக இருபது லட்சம் ( 2,001,926) மக்களும் அதாவது பிரிவினைக்கு ஆதரவாக 45 சதவீத மக்களும்,இணைந்து வாழ 55 சதவீத மக்களும் வாக்களித்தார்கள்.

### அதிகாரப்பரவலாக்கமே பிரிவினையை பலவீனப்படுத்தும்

தேர்தலைத் தொடர்ந்து பிரிவினையை ஆதரித்து தாம் தலைமை தாங்கி வழி நடத்திய ஸ்கொட்லாந்து தேசியக் கட்சியின் தலைமைத்துவத்திலிருந்தும், ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்தின் முதலமைச்சர் பதவியிலிருந்தும் விலகுவதாக அதன் தலைவர் அறிவித்தார். இத் தேர்தல் பல முக்கியமான அனுபவங்களை எமக்கு அளித்திருக்கிறது. எவ்வளவுதான் பிரிவினைக்கான நியாயங்கள் இருப்பினும், பொருளாதார வாழ்வே அதன் இறுதிப் போக்கைத் தீர்மானிக்கிறது. வளமுள்ள பிரதேசமாக ஸ்கொட்லாந்து இருந்த போதும் அதன் வளர்ச்சி இணைந்து வாழ்வதன் மூலமே சாத்தியமாகும் என்பதை மக்கள் நன்கு உணர்ந்துள்ளதை தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன. இருப்பினும் பிரிவினைக்கான பலமான உணர்வுகள் இருப்பதை மறுக்க முடியாது என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே இணைந்து வாழ்வதற்கு பிரித்தானிய அரசு அதிகாரப் பரவலாக்கத்தை விரிவுபடுத்துவது அவசியம் என்பது உணர்த்தப்பட்டுள்ளது. பிரிவினையைத் தடுப்பதற்கு சகல கட்சிகளின் ஒருமித்த ஆதரவு அவசியம் என்பதனையும், நாட்டுப் பிரிவினையை அரசியலாக்கி அதில் அரசியல் லாபம் பெற முடியாது என்பதும் தெளிவாகி உள்ளது. அதிகாரப் பரவலாக்கத்தின் மூலமே பிரிவினைக்கான அடிப்படைகளைப் பலவீனப்படுத்த முடியும் என்றாகிறது. மத்தியில் அதிகாரப் பரவலாக்கத்தை ஆதரிக்கும் போக்கு அவசியம் என்பதனையும் இவை உணர்த்தி நிற்கிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோழர் ராஜன் - மயிலிட்டி

# தமிழ் இனத்தின் அரசியல், ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தில் தம் உயிரை அர்ப்பணித்த தோழர்களை நினைவு கூருவோம்

தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்து ஆகஸ்ட் மாதத்தில் உயிர் நீத்த தோழர்கள் இவர்கள்.

அவர்களின் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது, அவர்கள் விட்டுச் சென்ற பணியை, நம்பிக்கைகளை

முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு இத் தோழர்களுக்கு அஞ்சலி செலுத்துவோம்.

| பெயர் | தோழர் | இற.திகதி | வசிப்பிடம் | காரணம் |
|---|---|---|---|---|
| எஸ் சுதாநிதி | சுதா | 18.10.1985 | காரைதீவு | எஸ்.ரி.எவ் |
| எஸ். பிள்ளைநாயகம் | கிருபா | 18.10.1985 | குருமன்வெளி | எஸ்.ரி.எவ் |
| ஏ.செல்வக்குமார் | குணம் | 22.10.1985 | கல்லாறு | எஸ்.ரி.எவ் |
| எஸ். சிவப்பிரகாசம் | ரஞ்சித் | 05.10.1987 | களுவன்கேணி | எல்.ரி.ரி.ஈ |
| பி. சின்னத்தம்பி | கறுவல் | 24.10.1989 | நாசிவன்தீவு | எல்.ரி.ரி.ஈ |
| என். சூட்டி | கெஸ்றின் | 17.10.1989 | பேத்தாளை | எல்.ரி.ரி.ஈ |
| எஸ். ஆறுமுகம் | மதி | 17.10.1989 | நாசிவன்தீவு | எல்.ரி.ரி.ஈ |
| ஆர். வீரசிங்கம் | சேகர் | 26.10.1989 | சித்தாண்டி | எல்.ரி.ரி.ஈ |
| கே. சத்தியசிவநாதன் | வாலா | 26.10.1989 | காத்தான்குடி | எல்.ரி.ரி.ஈ |
| யோகதாசன் | திலகன் | 16.10.1986 | | கடற்படை |
| | சாமி | 17.10.1988 | இடைக்காடு | எல்.ரி.ரி.ஈ |
| ஆ. சுரேஸ்குமார் | ஜீவா | 22.10.1989 | வளலாய் | எல்.ரி.ரி.ஈ |
| நாகேந்திரஜோதிராஜா | ராஜன் | 15.10.1989 | மயிலிட்டி | எல்.ரி.ரி.ஈ |
| பொ. சிறிதரன் | | .10.1990 | மயிலங்காடு | எல்.ரி.ரி.ஈ |
| க. மார்க்கண்டு | | .10.1986 | மட்டுவில் | எல்.ரி.ரி.ஈ |

தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் பங்கேற்று வருடந்தோறும் இம் மாதத்தில் உயிர் நீத்தவர்களில் எம்மால் திரட்ட முடிந்த தோழர்களின் பெயர் விபரங்களை மட்டுமே இங்கே பிரசுரித்துள்ளோம். இங்கு நினைவு கூரப்பட்ட தோழர்களின் விபரங்களை பூரணப்படுத்துவதற்கு அவர்களது படங்கள் அவர்கள் தொடர்பான தகவல்களை எமக்கு அனுப்பி உதவுமாறு தோழர்கள் அன்பர்கள் நண்பர்கள் குடும்பத்தவர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம். இங்கு இடம்பெறத் தவறிய தோழர்கள் பற்றிய விபரங்கள் தெரிந்தவர்கள் படங்களை வைத்திருப்பவர்கள் அவற்றையும் எமக்கு அனுப்பி உதவுமாறு வேண்டுகின்றோம்.

## ராஜனி திராணகம நினைவு நிகழ்வுகள்



யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் உடற்கூற்றியல் துறைத் தலைவரும், மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக் கழக ஆசிரியர் குழுவின் (UTHR-J) ஸ்தாபகர்களில் ஒருவருமான ராஜனி திராணகம நினைவு தின நிகழ்வுகள் செப்டம்பர் 20ம் 21ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

"ராஜனியை நினைவு கூருவோம்" "நீதிக்கும் ஜனநாயகத்திற்கும் உயிர்கொடுத்த அனைவரையும் நினைவில் கொள்வோம்" என்ற பதாகையின் கீழ் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

1989 செப்டம்பர் 21 இல் ராஜனி திரணகம படுகொலை செய்யப்பட்டு 25 வருடங்களின் பின்னரே யாழ்ப்பாணத்தில் பகிரங்கமாக இத்தகைய ஒரு நினைவு தின கூட்டத்தை அவரை நேசிப்பவர்களால் நடாத்த முடிந்திருக்கிறது.

யாழ் பல்கலைகக் கழகத்தில் ராஜனியின் நினைவு தின நிகழ்வுகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தபோதும் வெவ்வேறு தரப்பிலிருந்தும் வந்த முட்டுக்கட்டைகள், புறக்கணிப்புக்கள் காரணமாக நிகழ்வுகள் திட்டமிட்டபடி யாழ் றிம்மர் மண்டபத்தில் நடைபெற்றன. யாழ் பொது நூலகத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்ட நிகழ்வுகளுக்கும் அரசியல் சம்பந்தப்பட்ட நிகழ்வு என்பதால் அனுமதி வழங்கப்படவில்லை.

புலிகளின் அதிகாரத்திற்குப் பணிய மறுத்தவர்களின் ஜனநாயக உரிமைகள் நசுக்கப்பட்டது போன்றே புலிகள் இயக்கத்தின் சிதைவிற்குப் பின்னரும் ஏக பிரதிநிதித்துவ அகங்காரமும், அதிகார வர்க்கக் கெடுபிடிகளும் தொடர்ந்தவண்ணமே உள்ளன.

இலங்கை அரசாங்கம், அரச படைகள், இந்திய அமைதிகாப்புப்படை, ஆயுதந்தாங்கிய இயக்கங்கள் என அனைத்துத் தரப்பினரதும் மனித உரிமை மீறல்கள் குறித்து பதிவு செய்வதிலும், அவற்றுக்கு எதிராகக் குரல்கொடுப்பதிலும் முன்னின்ற ராஜனி திராணகமவை 25 வருடங்களின் பின் நினைவு கூர்ந்து வெளியிடப்பட்டுள்ள நினைவு மலரில் புலிகள் தான் அவரை படுகொலை செய்தார்கள் என்ற தகவல் பதிவு செய்யப்படாதது நெருடல்.

பாதுகாப்புக் காரணங்களால் உடனடியாக உண்மையை வெளிட முடியாமற் போனதற்கு மனம் வருந்தி புலிகள் தான் இந்தக் கொலையைப் புரிந்தார்கள் என்ற உண்மையை ராஜனியிடம் கல்வி பயின்ற யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒருவர் சில வருடங்களுக்கு முன்னரே தெரிவித்திருந்தார் துப்பாக்கியால் சுட்ட புலி உறுப்பினரின் பெயர் விபரங்களுடன் இதற்கு உடந்தையாயிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் குறித்தும் அவர் தெரிவித்திருந்தார்.

மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக் கழக ஆசிரியர்கள் குழுவும் (UTHR-J) கொலைஞர்கள் புலிகள் என்பதை உறுதிப்படுத்தியிருந்தது.

ராஜனி படுகொலை செய்யப்பட்டவுடன் யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள், ராஜனியின் சகபாடிகள் உட்பட பலராலும் படுகொலைக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் மீதும் ஐ.பி.கே.எவ் மீதும் சந்தேகம் வெளியிடப்பட்டது, குற்றம் சுமத்தப்பட்டது.

ராஜனி திராணகமவின் 25 ஆவது வருட நினைவு தினத்தை யாழ்ப்பாணத்தில் நினைவு கூருவதற்கு கிடைத்த இச் சந்தர்ப்பத்தில் ராஜினியை கொன்றவர்கள் யார் என்பது ஐயந்திரிபற வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். புலிகளால் கொல்லபடுபவர்கள் துரோகிகள் என்ற முத்திரை குத்தும் அச்சம்தரும் சூழல் இன்னும் அகலவில்லைப்போலும்

ராஜனி திராணகம அவரது உயர்ந்த கருத்துக்களுக்கள், உன்னத பணிககளால் எம்மிடையே வாழ்வார்.

## 10வது நினைவு தினம்



தோழர் உமாகாந்தன் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், மனித குலம் எதிர்கொண்ட அனைத்து ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் சிந்தித்தவர், செயற்பட்டவர். பிரான்ஸில், தனது 48 வது வயதில் 28.09.2004 இல் எம்மைவிட்டுப் பிரிந்தார். இலக்கிய ஈடுபாடுள்ள ஒருவராகவும், உலகெங்கும் அடக்குமுறைகளுக்கு எதிராகப் போரடிய மக்கள், இயக்கங்கள் தொடர்பாகவும் பரந்த அறிவை பெற்றிருந்த அவர் பத்திரிகைகள் வாயிலாகவும் இலக்கியச் சந்திப்புக்கள் மூலமாகவும் தமிழ் சமூகத்துடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்தார். பிரான்ஸிலிருந்து தமிழ் முரசு என்ற சஞ்சிகையை வெளியிட்ட அவர் சர்வதேச விடுதலை இயக்கங்கள் பற்றிய பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இலங்கை அரசின் அடக்குமுறைகளுக்கு எதராக தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்திலும் தமிழ் சமூகத்தில் நிலவிய ஜனநாயக விரோத போக்குகளுக்கு எதிரான போராட்டத்திலும் அவர் கணிசமானளவு காலம் ஈபிஆர்எல்எவ் உடன் கைகோர்த்து நடந்தவர். அவரது இழப்பு அடக்கி, ஒடுக்கப்படும் மக்களுக்கு பேரிழப்பாகும். அவரது நினைவுகள் எமது பாதைக்கு ஒளிதரும்.

## தெலுங்கானா – ஸ்கொட்....

1 ம் பக்கத் தொடர்ச்சி

நடந்த போது கியூபெக் கனடாவுடன் தொடர்ந்து இணைந்திருப்பதற்கு 50.7 வீதமானவர்கள் வாக்களித்தார்கள்.

இதேபோல் உக்ரேனில் பாசிச செல்வாக்குடனான ஆட்சியதிகாரம் இவ்வருட முற்பகுதியில் உருவாகிய போது அது ரஷ்ய மொழியை அரசகரும மொழி என்ற நிலையிலிருந்து நீக்கியது.

ரஷ்யமொழி பேசுபவர்கள் அதிகமாக வாழும் கிரிமியாவில் தொடர்ந்து உக்ரேனின் பகுதியாக இருப்பதா அல்லது ரஷ்யாவின் பகுதியாக அமைவதா என்று சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 96.77 வீதமானவர்கள் ரஷ்யாவின் பகுதியாக இருப்பதற்கு வாக்களித்தார்கள்.

ஆனால், மேற்குலகோ -அமெரிக்காவோ உக்ரேனின் கீவ் ஆட்சியாளர்களோ கிரிமிய சர்வசனவாக்கெடுப்பை ஏற்றுக் கொள்ளவில்லை.

எவ்வாறெனினும் தேசங்களின் தனித்துவம், சுயாதீனமாக ஒன்றிணைதல் பற்றிய கருத்துக்கள் உலக அளவில் செழுமை அடைந்து வருகின்றன.

இதனை குறுந்தேசிய பெருந்தேசிய உணர்வுகளுடன் குழப்பத் தேவையில்லை.

எமது இலங்கை பல்லினங்களின் தேசமாக நடைமுறை அர்த்தத்தில் மாற்றமடைய வேண்டும்.

உலகளாவிய போக்கு தேசிய இன சமூகங்களுக்கு அதிகாரங்களை பகிருதல் தொடர்பாக அளவு ரீதியான மாற்றங்களை காட்டுகின்றன.

இதுவரை பொதுவிதியாக இருந்தவை மீறப்பட்டு புதிய தற்செயல்கள் நிகழ்கின்றன.

இந்த தற்செயல்களின் அதிகரிப்பு குணாம்ச ரீதியாக புதிய பொதுவிதியாக மாறும்.

இலங்கையில் வெவ்வேறு இன சமூகங்களின் பொருளாதார கலாச்சார தனித்துவங்கள் கருத்திற்கெடுக்கபட்டு தீவிர அரசியலமைப்பு மறு சீரமைப்பு காலத்தோடு ஒத்து நிகழ வேண்டும்.

ஏற்கனவே 13 ஆவதன் கீழான பிராந்திய அதிகாரங்கள் முழுமைப்படுத்தப்பட வேண்டும்.

பாராளுமன்றத்திற்கப்பால் மாகாண சபை இன்னொரு சட்டவாக்க சபையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

இதுவே இலங்கையின் விரைவான சமூக முன்னேற்றத்திற்கான ஒரே ஒரு பாதையாகும். மாற்று வழி கிடையாது.

சுகு-ஸ்ரீதரன்

## புத்துயிர் பெறும் கைத்தொழிற் ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுவேலி, கைத்தொழிற் பேட்டை அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் தமிழர் தரப்பின் ஈடுபாட்டுடனும், பிரசன்னத்துடனும் இடம்பெறுவதால் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் அணுகுவது புத்திபூர்வமானதல்ல. அதன் பயன்கள் தமிழ் சமூகத்திற்குக் கிடைக்கச்செய்தல் முக்கியம்.

யாழ் பல்கலைக்கழகம், காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை போன்ற வட பகுதிக்குக் கிடைத்த வளங்கள் அனைத்தும் அரசாங்கத்தின் அனுக்கிரகம் பெற்றவர்கள் மூலமாகவே சாத்தியமாகின.

கைத்தொழிற் பேட்டை திறப்பு விழாவின் போது சமூகமளித்திருந்த பிரமுகர்கள் பலரும் தூங்கி விழுந்ததை படம்பிடித்துப் போடுவதில் காட்டப்பட்ட அக்கறை கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் இந்த கைத்தொழில் நகரம் தொடர்பாக தமிழர் தரப்பின் உள்ளக்கிடக்கையை பார்வைக் கோணத்தைத் துலாம்பரமாகக் காட்டுகிறது. அது

இவற்றின் மூலம் உள்ளூரில் வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்க வாய்ப்புண்டு. காங்கேசன்துறை துறைமுகம், பலாலி விமான நிலையம், புகையிரத நிலையம் என்பவற்றுக்குச் சமீபமாக இந்த தொழில் நகரம் அமைந்திருப்பது இங்கு உற்பத்தியாகும் பொருட்களை சந்தைப்படுத்தலுக்கான கூடுதல் வசதியாயிருப்பதுடன், எதிர்காலத்தில் ஏற்றுமதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளவும் உதவும்.

எனவே, இதன் தொடர்ச்சியாக பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் என்பன மீண்டும் செயற்படுவதற்கு பொருத்தமான, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசியல் தலைவர்கள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் முன்னெடுத்தல் வேண்டும்.

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள் இங்கு வந்து முதலீடுகளை மேற்கொள்ள ஊக்கமளிக்கப்பட வேண்டும் அவர்களுக்கிருக்கும் தடைகள் களையப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒய்யாரக் கொண்டையினுள் ஈரும் பேனும்

**தமிழ் அரசியற் பிரதிநிதிகளின் அந்தரங்க மனோநிலைகளையும் பின் கதவுகளினூடாக கெஞ்சிநிற்கும் இலட்சணங்களையும் சிங்கள அமைச்சர்களும் இராணுவ மற்றும் சிங்கள நிர்வாக அதிகாரிகளும் நன்கு தெரிந்தே வைத்திருக்கிறார்கள்**



"வடக்கு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை அள்ளிக் குவிப்போம்!"

"விதவைகள் அனைவரும் கௌரவமாக வாழ்வதற்கு சமூகபொருளாதாரரீதியான புனர்வாழ்வு அளிப்போம்"

"விவசாயத்தை எழுச்சி கொள்ளச் செய்வோம்"

"மீன்பிடித் தொழில்களை புதுமை பெறச் செய்வோம்"

"கைத்தொழில்களை மீண்டும் வளம் பெறச்செய்வோம்"

"வெளிநாட்டுத் தமிழர்களின் மூலதனங்களால் முன்னேற்றங்கள் செய்வோம்"

என சமூக பொருளாதார வாக்குறுதிகளையும்

*"இராணுவத்தை வெளியேற்றுவோம்"*

*"இராணுவ ஆளுநரை மாற்றுவோம்"*

*"மாகாண சபைக்கான அதிகாரங்கள் அனைத்தையும் நிலைநாட்டுவோம்"*

*என்ற அரசியல் வாக்குறுதிகளையும் அள்ளி வழங்கி வடக்கு மக்களுக்குப் பெரும் நம்பிக்கைகளையம் எதிர்பார்ப்புகளையும் உருவாக்கியே இந்த மாகாண சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியைப் பெற்றது.*

*இப்போது*

*"ஆளுநர் விடுகிறார் இல்லை",*

*"அரசாங்கம் தருகிறார்கள் இல்லை"*

*"மஹிந்த கேட்கிறார் இல்லை"*

*என்று அழுது வடிக்கிறார்கள்.*

13வது அரசியல்யாப்புத் திருத்தம் புதிதாகவா ஏற்பாடு செய்யப்பட்டது?

அதன்மீது உருவான மாகாணசபையின் தேர்தலில்தானே போட்டியிட்டு பதவிகளையும் பெற்றிருக்கிறார்கள்.

அதற்குத் தெரிவானவர்களின் வசதிகளும் வளங்களும் வாய்ப்புகளும் எந்தவித சந்தேகத்திற்கும் இடமின்றி இந்த ஒரு வருடத்தில் நன்கு பெருகித்தானே உள்ளன.

இராணுவ அதிகாரியான ஆளுநர் மாற்றப்படவில்லை,

இராணுவப் பிரசன்னம் குறைக்கப்படவில்லை மற்றும் அதன் தலையீடுகள் குறையவில்லை,

யுத்தகாலத்தில் அரச படைகளின் தாக்குதல்களால் கொல்லப்பட்டோர் மற்றும் யுத்த வரைமுறை மீறல்கள் மீதான சர்வதேச விசாரணைக்கு அரசாங்கம் ஒத்துழைப்பதில்லை என உறுதியாகவே இருக்கின்றது,

அரசியல் யாப்பு ரீதியாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கூட மாகாண சபைக்கு அரசாங்கம் வழங்கத் தயாராக இல்லை என்பது தெளிவாகவே உள்ளது.

உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக வலிகாமத்திலிருந்து வெளியேற்றப்பட்டு அகதிகளான மக்களில் இன்னும் ஒரு பகுதியினர் தமது இடங்களுக்குத் திரும்பமுடியால் இன்னமும் அகதி முகாம்களிலேயே வாழ வேண்டியிருக்கின்றது.

இந்தக் காரணங்களுக்காக, இன்னும் மூன்று மாதங்களில் மக்களை அணிதிரட்டிப் போராடப் போவதாக தமிழரசுக் கட்சித் தலைவர் கௌரவ சேனாதிராஜா அவர்கள் முழங்கி வருகிறார். அதற்காக வெளிநாட்டு வாழ் தமிழர்களிடையேயும் ஆதரவு திரட்டி வருகிறார்.

அதற்கும் மேலாக, வன்னிப் பாராளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் சாகும்வரை உண்ணா விரதம் இருக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்.

ஆனால், இவை எதற்காகவும் வடக்கின் முதலமைச்சரோ அல்லது எந்தவொரு அமைச்சரோ அல்லது எந்தவொரு மாகாணசபை உறுப்பினரோ அரசிடமிருந்து எந்த வசதியையும் சலுகையும் வாங்குவதில்லை என அவற்றைத் தூக்கியெறிந்து விட்டு தமது சுயமரியாதையை நிலைநாட்டத் தயாராக இருக்கிறார்களா?

தாங்கள் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளுக்காகவே தவிர தங்களது சுயநலன்களுக்காக மக்களிடம் வாக்குக் கேட்கவில்லை என தங்கள் நடைமுறையால் நிரூபிக்கத் தயாரா?.

மாறாக இந்தத் தமிழ்த் தேசியப் பிரதிநிதிகள் மத்திய அரசின் அமைச்சர்கள் தொடக்கம் குமாஸ்த்தாக்கள் வரை சென்று வசதிகளையும் சலுகைகளையும் ஒன்று விடாமற் பெற்றுக் கொள்வதிலேயே மிகவும் அக்கறையாக உள்ளனர் என்பது உலகறிந்த விடயம்.

இன்றுள்ள தமிழ் அரசியற் பிரதிநிதிகளின் அந்தரங்க மனோநிலைகளையும் பின் கதவுகளினூடாக கெஞ்சிநிற்கும் இலட்சணங்களையும் சிங்கள அமைச்சர்களும் இராணுவ மற்றும் சிங்கள நிர்வாக அதிகாரிகளும் நன்கு தெரிந்தே வைத்திருக்கிறார்கள். அவ்வப்போது கிண்டலடித்துச் கொள்கிறார்கள். பொதுமக்களுக்கும் அவை பரகசியங்களே!

ஒரு சமூகத்தின் பிறப்புரிமைகளுக்காகவும், ஜனநாயகத்துக்காகவும், சமநீதிக்காகவும், சமத்துவத்துக்காகவும் அந்த சமூகத்தின் தலைவர்கள் பொதுமக்களை அணிதிரட்டிப் போராடுவது அவசியமே! மனிதகுலம் போராட்டங்களாலேயே முன்னேற்றங்களை அடைந்தது என்பதே வரலாறு.

பாராளுமன்றத்தினதும் மாகாண சபைகளினதும் உள்ளுராட்சி சபைகளினதும் பதவிகளைத் தளமாகக் கொண்டு தமிழர்களின் அடிப்படையான அபிலாஷைகளுக்காகவும் நியாயமான உரிமைகளுக்காகவும் போராடுவது அவசியமே. பேச்சுவார்த்தைக் களங்களின் வெற்றி ஒரு சமூகத்தின் போராட்டக் களங்களில் நிலைநாட்டப்படும் பலங்களிலேயே தங்கியுள்ளது. ஓர் அறவழிப் போராட்டத்தின் பலம் வேஷங்களாலும் கோஷங்களாலும் அல்ல மாறாக மக்களின் தொடர்ந்த அணிதிரளலினாலும் தலைவர்களின் தளராத தியாகங்களாலுமே நிர்ணயிக்கப்படுகின்றது.

ஆனால், சொந்த சமூகத்தை எப்படியும் ஏமாற்றி தமக்கு சுய பிழைப்புத் தேடிக் கொண்டிருக்கும் இந்த மேடை நாடக போலி மாவீரர்களின் போராட்டங்கள் எப்படி இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள பெரிய ஆராய்ச்சிகள் எதுவும் தேவையில்லை.

பிரபாகரனைக் காப்பாற்றுவதற்காக பிரிட்டிஷ் பாராளுமன்றத்தையே இயங்கவிடாமற் செய்த வெளிநாட்டுத் தமிழர்கள் சொந்த நாட்டில் வாழும் தமிழர்களின் நியாயங்களுக்காக ஓர் அரைப்படியைக் கூட அளக்கத் தயாராக இல்லை.

போராட்டம் வேஷத்தில் மட்டும் இருந்தால் அது தீவினையாகும். அது போராடுபவர்களின் இரத்தத்தில் ஊறிய இதயத்தின் பாகமாக இருக்க வேண்டும்.

இராணுவம், ஆளுநர், சர்வதேச விசாரணை, அதிகாரப் பகிர்வு என்னும் விடயங்கள் ஒருபுறமிருக்க,

தமிழ் அறிவார்ந்தோர் சிந்தனையாளர்கள் பத்திரிகையாளர்கள் மத்தியில் உள்ள பரபரப்பான - முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களாக "தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் கலாச்சாரச் சீரழிவு" என்ற தலையங்கத்தின் கீழ் பல விடயங்கள் பட்டியலிடப்பட்டு அவை தொடர்பாக ஆத்திரங்களும் விமர்சனங்களும் கவலைகளும் எழுப்பப் படுகின்றன.

அவ்வாறு சீரழிவுகள் எனச் சொல்லப் படுபவைகள்:

1. தமிழ் இளைஞர் குழுக்களிடையே - வெவ்வேறு விளையாட்டுக் கழக இளைஞர்களிடையே - வெவ்வேறு கிராம இளைஞர்களிடையே - வெவ்வேறு சாதி இளைஞர்களிடையே - வாள் வெட்டுகள், கத்திக் கத்துகள், பொல்லுத் தாக்குதல்கள் எனப் பல:
2. தமிழ் இளைஞர்கள் தமது செலவுகளுக்காக ஏதாவது காரணங்களைச் சொல்லி வெளிநாடுகளிலுள்ள அவர்களது உறவினர்களிடமிருந்து அடிக்கடி பணம் பெறுவதனால் இங்கு ஏதும் வேலை செய்து உழைத்து வாழத் தயாராக இல்லாமல் நண்பர்கள் குழுக்களாக வெட்டியாக ஊரைச் சுற்றுவதோடு சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடுகிறார்கள்:
3. தமிழ்ச் சமூகத்தில் விபச்சாரமானது மறைமுகமாக ஆங்காங்கே நடைபெறும் ஒரு தனிப்பட்ட விவகாரம் என்பதை மீறி இப்போது ஒரு நிறுவனமாக்கப்பட்ட வியாபாரமாக ஆகியுள்ளது:
4. தமிழ்ச் சமூகத்தில் இப்போது தற்கொலைகள் பல மடங்கு அதிகமாகி உள்ளன

என்று கூறப்படுகின்றன. மேற்கூறப்பட்டவைகள் மிகைப்படுத்தப்படவில்லை என்றே எடுத்துக்கொண்டாலும்

இந்த நிலைமைகளுக்கு காரணங்கள் எவை ?

இந்த நிலைமைகளை மாற்றுவற்கு தமிழ்த் தேசிய சமூக அரசியற் பிரமுகர்கள் ஏதாவது திட்டங்களை முன்னெடுக்கிறார்களா? ஆக்கபூர்வமாக ஏதாவது கடமைகளை நடைமுறையில் மேற்கொள்கிறார்களா? இல்லை! வெறுமனே அந்நியர்கள் போல நின்று தமது ஆத்திரத்தைக் கொட்டுகிறார்களா?

அல்லது, இவற்றிற்கும் அரசே காரணம் என்று குற்றம் சாட்டுவதோடு திருப்திப் படுகிறார்களா?

*சொந்த சமூகத்தின் சிதைவுகளையும் சீரழிவுகளையும் பயன்படுத்தி அரசியல் மற்றும் பத்திரிகை வியாபாரங்கள் பண்ணி பணத்தையும் பதவிகளையும் அள்ளிக் கொள்ளும் பிரமுகர்களையே தமிழ்ச் சமூகம் தலைவர்களாகவும் பிரதிநிதிகளாகவும் கொண்டிருக்கின்றது.*

*அவ்வாறானவர்களை மக்களின் பிரதிநிதிகளாக ஆக்குபவர்களையே தமிழ்ச் சமூகம் பிரமுகர்களாகவும் புத்திஜீவிகளாகவும் கொண்டிருக்கின்றது.*

தமிழ்ச்சமூகத்தை குறை சொல்வதில் நான் திருப்தி கொள்ளவில்லை. ஆனால், சொந்த விருப்பு வேறுபாடுகளுக்கு அப்பால் காரணகாரிய உண்மைகளைப் புரிந்து கொள்வது அவசியமாகும்

தமிழினத்தின் சமூக அரசியல் நோய்களைப் பெருக்கி வாழ வைக்கும் கிருமிகள் வெளியில் இருப்பதைவிட அதிகமாக தமிழ்ச் சமூகத்துக்குள்ளேயே கூடுகட்டி குஞ்சு பொரித்து வாழ்கின்றன.

இந்த அழிவுக் கிருமிகளை அழிக்கும் ஆற்றல் கொண்ட மாற்று சக்திகள் இந்த தமிழ்ச் சமூகத்துக்கு உள்ளேயே இருந்து தான் பிறந்து வளர்ந்து எழ வேண்டும்.

அதுவரை இன்று தமிழினம் அனுபவித்து வரும் சமூக அரசியல் நோய்கள் தொடர்வதை யாரும் மாற்ற முடியாது என்ற உண்மையை, அது கசப்பான ஒன்றாக இருந்தாலும், ஏற்றேயாக வேண்டும்.

**அ.வரதராஜப்பெருமாள்**

## நாசமானது குடிநீர்...

1 ம் பக்கத் தொடர்ச்சி

மேற்படி கூட்டத்திற்குத் தலைமை வகித்த பிரதேசசபை தவிசாளர் கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து தரையில் கழிவு நீர் மற்றும் ஓயில் என்பவற்றை தேங்கவிடுவதை மின் பிறப்பாக்கி நிலைய நிர்வாகம் நிறுத்திக்கொண்டுவிட்டது.

ஆனாலும், இப்போது இந்த எண்ணெய் கசிவினால் மின் பிறப்பாக்கி நிலைய சுற்றாடலில் சுன்னாகம் கிழக்கு பகுதியில் மேலும் பல கிணறுகளில் நீர் மாசடைந்து பாதிப்பு அதிகரித்துள்ளதால் பிரச்சினை பூதாகரமாகியுள்ளது. இதனால் சுன்னாகம் மின்பிறப்பாக்கி நிலைய சுற்றாடலில் வசிக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அவர்களிடம் முறையிட்டுள்ளனர்.

சுன்னாகம் பகுதியில் 100 கிணறுகளில் நடாத்தப்பட்ட பரிசோதனைகளில் 82 கிணறுகளில் நீர் மாசடைந்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், புளொட் தலைவரும் மாகாணசபை உறுப்பினருமான த.சித்தார்த்தன் ஆகியோர் சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலைய நிர்வாகிகள் மற்றும் பொது மக்களை சந்தித்து கிணற்று நீர் மாசடைந்திருப்பது தொடர்பாக கலந்துரையாடியதுடன் இம் மக்களின் குடி நீர்த் தேவையை பூர்த்தி செய்தவற்கான உடனடித் தீர்வாக தண்ணீர் பவுசர்களை வழங்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருந்தனர். வலிகாமம் தெற்கு பிரதேச சபை பல இடங்களில் பிளாஸ்டிக் கொள்கலன்கைளை நிறுவி நீர் விநியோகத்தை மேற்கொண்டுள்ளது. காரைநகர், நவாலி, சங்குவேலி, கந்தரோடை உட்பட குடாநாட்டின் பல்வேறிடங்களுக்கும் சுத்தமான குடிநீரை வழங்கிய சுன்னாகம் பிரதேசத்தின் பல பகுதிகளில் இப்போது பிளாஸ்டிக் கொள்கலன்களிலிருந்து குடிநீரைப்பெறும் அவலநிலை உருவாகியுள்ளது. மேற்படி தற்காலிக ஏற்பாடுகள் அத்தியாவசியமானதாயினும் பிரச்சினைக்கு நிலையான தீர்வு ஒன்றை பாதிக்கப்பட்ட மக்கள் கோரி நிற்கின்றனர்.

கழிவு எண்ணெய் நிலத்தடி நீரில் கலக்காதவாறு பொருத்தமான ஏற்பாடுகளை செய்வதும் இதனை உத்தரவாதப் படுத்துவதும் முதல் முக்கியமாகும்.

எண்ணெய் படலம் காணப்படும் கிணறுகளிலிருந்து அவற்றை அகற்றுவதற்கான சாத்தியங்கள் குறித்து ஆராய்ந்து, நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். இது நீண்ட காலம் எடுக்கும் தொடர் செயல் முறையாயினும் விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பவற்றை ஜீவனோபாயமாக மேற்கொள்ளும் இப்பகுதி விவசாயிகளின் நீர் தேவை பூர்த்தி செய்யப்படுவதற்கும் இப்பிரதேச மக்கள் தமது கிணறுகளிலிருந்து பாதுகாப்பானதும், சுத்தமானதுமான குடிநீரைப் பெறுவதற்கும் இதுவே நிரந்தரத் தீர்வாக அமையும்.

தி. சிறிதரன் 294, கண்டி வீதி, யாழ்ப்பாணம், அ... இல ... யாழ்ப்பாணம் கங்கை அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org